Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 19 (03-01-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 319

## காலை உணவு விநியோகம் அகதி முகாமில் நிறுத்தம்

(புங்குடுதீவு)

இடம் பெயர்ந்த தீவக மக்கள் தங்கியிருக்கும் யாழ். கனகரெத்தினம் மகாவித்தியாலயத்தில் அம் மக்களுக்கு வழங் கப்பட்டு வந்த காலை உணவு கடந்த ஒரு வாரகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கஞ்சி, பாண் போன்ற உணவுகள் காலையில் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்ததாகவும், இந்த உணவுகளை விடுத்து வேறு உணவுகளை வழங்குமாறு இங்குள்ள சிலர் கேட்டுக் கொண்டதை அடுத்தே மேற்படி காலைஉணவு நிறுத்தப் பட்டதாகவும் கூறப்படுகிறது. (8 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுக்கு புகழ்மாலை

# உலக தமிழினத்தின் தலைவர்


## சென்னைப் பொதுக் கூட்டத்தில் பாராட்டு

(சென்னை)

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவது தமிழ் நாட்டு தமிழ் மக்களின் நலன்களைப் பேணுவதாக அமையும். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் உலகத் தமிழினத்தின் உண்மையான தலைவர். நாங்கள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகவோ அல்லது தீவிரவாதிகளாகவோ கருதவில்லை. அவர்களை தியாகிகளாகவே நாம் மதிக்கிறோம்."

இவ்வாறு அண்மையில்சென்னையில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் திராவிட இயக்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கர்நாடகத்தில் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் நாட்டுக்கு வெளியே தமிழ நக்குப் பாதுகாப்பு இல்லையென்றால் 'தேசியம்' (இந்திய தேசியவாதம்) பேசுதால் என்ன பயன்? தமிழ்நாட் (8 ஆம் பக்கம் பார்க்க)



## வீரச்சாவு

### சின்னவன்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சூரன்கல் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலொன்றில் வீரவேங்கை சின்னவன் அல்லது இடைக்காடன் (மூர்த்தி சீவரெத்தினம் ஆலங்கேணி திருக்கோணமலை) வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

# 'சமாதான கிணறை தோண்ட இனவாத பூதம் புறப்பட்டது'

சமாதானக்கிணறுதோண்ட இனவாதப் பூதம் புறப்பட்டது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். இனப்பிரச்சினைக்கான தொண்டமானின் தீர்வுத் திட்டம் குறித்து நேற்றுமாலை குருநகரில் நடைபெற்ற மாவீரர் துயிலும் இல்ல மாதிரித் திறப்பு விழா வைபவத்தில் பேசும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி மாஸ்டர் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய திரு. அன்ரன் பாலசிங்கம் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் முன்னைய சகல தீர்வுத் திட்டங்களையும் விட (8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள்; கைவிடும் நிலையில் தொண்டா

அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே நடத்த உத்தேசித்த தமது சமாதான முயற்சிகளைக் கைவிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளார் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலன்ட்நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டது. தமது சமாதானத் திட்டத்திற்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்திருப்பதால்தான் தமது யாழ்ப்பாண விஜயத்தை மீட பரிசீலனை செய்ய நேரிட்ள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற தெரிவுக் குழு; தீர்வு வழிவகைகள் ஆராய்வதில் தீவிரம்?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழு சாத்தியமான அளவு விரைவில் அதன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக பல் உபகுழுக்களாக பிரிந்து செயற்படவுள்ளதாக தெரிவிக்கப் (8 ஆம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்சினை தீராவிடில் நாடு இரண்டாய் பிரியும்

## சிங்களவருக்கு பிரேமா எச்சரிக்கை

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடில் நாடு பிளவுபடுவதைத் தவிர்க்கமுடியாது என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்த பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில்,

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ்பேசும் மக்களின் துயரங்களையும், வேதனைகளையும் புரிந்துகொண்டு அவர்களது தேவைகளையும், உரிமைகளையும் கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறினால் நாடு துண்டாடப்படுவதையோ, பிளவுபடுவதையோ தவிர்க்க முடியாது என்று குறிப்பிட்டார்.

இதேவேளைநாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் 'பயங்கரவாதம்' தோல்வியை எதிர்நோக்கி நிற்கின்றது. ஆனால் (8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை நசுக்கும்வரை நடவடிக்கை தொடரும்

### - சரத்முனசிங்கா

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளை நசுக்கும்வரைக்கும் எமது இராணுவ நடவடிக்கை தொடரும் என்று சிறிலங்கா இராணுவப்பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த சரத் முனசிங்கா இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்கும்வரைக்கும் எமது இராணுவ நடவடி (8 ஆம் பக்கம் பார்க்க)

## "பெலோசிப்"

இங்கிலாந்து வங்கியாளர் பட்டயத்து நிறுவனத்தின் (8 ஆம் பக்கம் பார்க்க)

# யா.பல்கலைமருத்துவபீடம் இடம் மாற்ற ஆலோசனை

## பின்னணியில் தமிழ்ப் பேராசிரியர்களும்

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் திட்டங்கள் தங்கு தடையின்றித் தொடர்ச்சியாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஒரு அமைவிடத்தில் யாழ்.பல்கலைக்கழகமருத்துவ பிரிவை நிறுவத் தேவையான வசதிகளைச் செய்யவேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உபவேந்தர்கள் குழு, மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் பணிப்பாளர்கள், கூட்டத்தில் உப-வேந்தர்கள் ஆலோசனை வழங்கியதாகபல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் ஏ.பி. ஆர். அலுவிகாரா யாழ். பல்கலைக்கழக உப வேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரியப்படுத்தியிருக்கிறார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் தமிழகத்தில் பந்த்

(சென்னை)

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து நேற்றுத் தமிழகத்திலும், புதுச்சேரியிலும் நடைபெற்ற பந்த் முழுமையாகவும், அமைதியாகவும் நடைபெற்றது. எந்தவித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை கர்நாடகத்திலிருந்து இடம் பெயர்ந்து தமிழகம் வந்துள்ள தமிழர்கள் நிலைமையை நேரில் கண்டறிவதற்கென மத்திய புனர்வாழ்வுத்துறை இணைச் செயலாளர் ஜி. என். பாண்டு இன்று சென்னை வருகிறார்.

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

* * * * * * * * * * * * * * * * * * *

வீரப்பிறப்பு
28-01-1965

வீரச்சாவு
03-01-1990

## சப்டன் நடேஸ்
## (தம்பு சிங்கராசா)

இந்தியப்படை இங்கு உலாவிய காலத்தில் அவர்கள் துணையோடு உலவிய குழு ஒன்றுடன் மட்டுவில் தெற்கில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய வேங்கை தம்புசிங்கராசா (கப்டன் நடேஸ்) மட்டுவில் தெற்கு அவர்களுக்கும். அவருடன் துணை நின்று போராடி வீரச்சாவு எய்திய வேங்கை 2ஆவது லெப்டினன்ட் பாபு கல்வயல் அவர்களுக்கும் எமது நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம.

மட்டுவில் தெற்கு
3-1-1992 (R/2057)

மட்டுவில் நுணாவில்
சிற்றூர் வை மக்கள்

---

தென்மராட்சி/பச்சிலைப்பள்ளி தெ.ப.பொ.
கூ. சங்கங்களின் வடிசாலை
சமாசம் - வரணி

## பதவிகள் வெற்றிடம்

1. வடிசாலை முகாமையாளர்

சம்பளத்திட்டம்:- (வருடம்) 48 000 – 73 000
4x1800 – 7x2400

கல்வித்தகைமை:- இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்றவர். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 15 வருட அனுபவம் பெற்றவர்.

வயது எல்லை:- 45 வயதுக்குட்பட்டவர்.

2. வடிகலன் இயக்குனர்

சம்பளத்திட்டம்:- 24 000 - 36.600
9x600 - 8x900

கல்வித்தகைமை:- க. பொ. த (சா. த) சித்தியுடன் தொடர்ச்சியாக 5 வருட காலம் வடிசாலை இயந்திரம் இயக்கிய அனுபவம் பெற்றவர்.

வயது எல்லை:- 25 — 40 வருடங்கள்

3, மூலப்பொருள் கொள்வனவு உத்தியோகத்தர்

சம்பளத்திட்டம்:- 1 600 – 31 800
16x400 - 9x600

கல்வித்தகைமை:- 3 வருட அனுபவத்துடன் இரசாயன பாடம் உட்பட ஒரே தடவையில் க. பொ. த (உ. த) சித்தியெய்தியவர்.

வயது எல்லை:- 25 — 40 வருடங்கள்.

குறிப்பு: (அ) சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கான சகல அலவன்ஸ்களும வழங்கப்படும்.

(ஆ) கேட்கப்பட்ட கல்வித்தகைமைகள் இருந்தும் உரிய அனுபவம் இல்லாதிருப்பின் பொருத்தமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவர்.

இ) பொறுப்புச்சளுக்கு ஏற்றவகையில் பிணைப்பணம் செலுத்த தயாராக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் 'பொதுமுகாமையாளர் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் கூ.சங்கங்களின் வடிசாலைச்சமாசம்-கச்சாய் வீதி, கொடிகாமம்'' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

முடிவு திகதி:- 15-01-1992.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி
தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
வடிசாலை-வரணி, கொடிகாமம்

(சி/3726)

---

## ஓய்வூதியம்

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் திட்டமொன்றினை விரைவில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான வைபவம் ஒன்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தலைமையில் ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992.01.10ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி:
தாதி (அமய / ஒப்பந்த)

சம்பளம்:
அமய நியமனம் - 83 ரூபா 40 சதம் (ஒரு நாளுக்கு) அத்துடன் பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்படும் இதர படிகளும்.

ஒப்பந்த நியமனம் - 2,085 ரூபா (மாதமொன்றுக்கு)

தகைமைகள்:
1. மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. இலங்கை மருத்துவப் பேரவையினால் தாதியாக அங்கீகரிக்கப்பட்டதற்கான தகுதிச் சான்றிதழ்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:
ஒப்பந்த அடிப்படையில் மேற்குறித்தபதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர்க்கு வயதெல்லை ஏற்புடையதாகாது,

விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச.மீற்றர் அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியனவற்றைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் தேதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
யாழ்ப்பாணம்.
1992.01.02

சி.3731

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
## (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 93
புதிய பிரிவு

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. வரதராஜன் |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| ) | திரு. மரியதாஸ் |
| கணக்கியல்: ) | திரு. யோகராஜா |
| ) | திரு. சௌந்தி |
| வர்த்தகம்: | பிரபல ஆசிரியர் |
| தமிழ்: | திருமதி மீரா |
| இந்து நாகரிகம்: | திருமதி அருள்நங்கை |
| புவியியல்: | திரு ஜோசப் |
| அரசியல்: | திரு. செல்வா |

**ஆரம்பம்: 4-1-92**

— சனி, காலை 8 - 00 மணி —

குறிப்பு பிரிவு I-ல் அனுமதி பெற்ற மாணவர்கள் வழமையான நேர அட்டவணைப்படி 4-1-92 ல் வரவும்.

(சி 3708)

---

## நினைவு கூருகின்றோம்

## 1992 - 01 - 03

1986ஆம் ஆண்டு பள்ளிக்குடியிருப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கித் தாக்கியதில் வீரச்சாவெய்திய

❀ **சுரேஸ்** [ வை. சுதேசராசா - சம்பூர், மூதூர் ]

இதே ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு தொலைத் தொடர்பு ஊழியர்

1987ஆம் ஆண்டு மூதூர் கடற்கரைச் சேனையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட

❀ **கிட்ணன்** [ சிவசேகரம் கிருஸ்ணராஜா - கட்டைபறிச்சான், மூதூர் ]

❀ **குணம்** [ இராசரத்தினம் குணரட்ணம் - சேனையூர், மூதூர் ]

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு கிரான் கிண்ணியடிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

1990ஆம் ஆண்டு கல்முனைக்குடியில் ஜிகாத்தால் கொலை செய்யப்பட்ட

**ஆதம்** [எஸ். எம். ஆதம்பாவா - 627, கடற்கரை சாய்ந்தமருது ]

இதே ஆண்டு நுணாவிலில் ஈ. பி. ஆர். எல். எவ். வுடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் நடேஸ்** [ தம்பு சிங்கராசா - மட்டுவில் ]

**2ஆம் லெப். பாபு** [ இளையதம்பி பாபு - கல்வயல், சாவகச்சேரி ]

1991ஆம் ஆண்டு மிதிவெடியில் சிக்கியதில் எம்மைப் பிரிந்த

**நவா** [ தங்கவேல் - சீனன்குடா, திருக்கோணமலை ]

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

❀ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

### — விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(சி-3370)




சந்துருக்கா,

நாங்கள் கூடிக் குலாவித் திரிந்த - கும்மாளமடித்த சிவத்தப் பாலம் பகுதியில் உனது வீரச்சாவு நிகழ்ந்ததெனக் கேள்விப்பட்டேன். இதுவரை காலமும் சிவத்தப்பாலப்பகுதியில் இருந்த புதர்கள்-எமக்கு கவசங்களாக இருந்து வந்திருக்கின்றன. இப்பகுதிக்கு வரும் எதிரிகள் இந்தப் பகுதிகளைச் சல்லடையாக்கி விட்டே முன்னேறுவர். ஆனாலும் பின்னர் அவர்கள் உடல் சல்லடையாகும்- ஆனால் உனது சம்பவத்தில் மட்டும் ஏன் இப்படி? இதே புதர்களுக்குள் படுத்திருந்த எதிரிகள் உன்னையும் உன்னோடு சென்றவர்களையும் எம்மிடமிருந்து பிரித்துவிட்டார்கள். உனது சாவு மக்களுக்கான பணியில் ஈடுபடும்போது நிகழ்ந்திருக்கின்றது- அவர்களுக்குத் தெரியும் இப்படியான பகுதியில் நீ உலாவுவாயென்று. எங்கள் எல்லோரையும் விட நீ மக்கள் ஆதரவு மிக்கவன். அந்த வசீகரம் எப்படித்தான் வந்ததோ உனக்கு?

1986 - 87 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உனது கண்ணில் ஏற்பட்ட சிறு கோளாறுக்கு சத்திரசிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது 'சந்துரு'' 'சந்துரு'' என்று வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருமே உன்னோடு உருகிப் போய் நின்றார்கள். ஏன் உனக்கு கண்ணாடி தேவைப்பட்டபோது கூட ஒரு வைத்தியர் தனது செலவிலேயே உனக்குக் கண்ணாடி வாங்கிக் கொடுத்தார். நீ என்ன மந்திரம் வைத்திருக்கின்றாய்? வாய் தான் உன் மூலதனமோ என்று உன்னை நாம் கேலி செய்வோம். வாய் மட்டுமா, நீ பழகும் விதம் - அது நானறிந்ததுதானே? இருவரும் ஒரே முகாமில் தானே பயிற்சி பெற்றோம்?

சத்துருக்கா! நீ இந்தியாவில் தங்கியிருந்த சமயம் நள்ளிரவில் தட்டியெழுப்பிய தமிழக காவற்துறையினர் உன்னைச் சிறையிலடைத்தனர். உன்னைப் போலவே இன்னும் பலரும் இவ்வாறு அடைக்கப்பட்டிருந்தனர். இரண்டு நாள் சிறைக் காவலர்களுடன் நீ பேசிக் கொண்டிருந்தாயாம். மூன்றாம் நாள் அவர்களே உன்னிடம் சிறைச்சாலைச் சாவிகளை ஒப்படைத்து 'இந்த ஜெயிலையே உங்ககிட்ட ஒப்படைச்சிருக்கம். பேறப்போ இதைப் பத்திரமாத் தந்திட்டுப் போங்க' என்று சொன்னதாகக் கேள்விப்பட்டோம். இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் ஒவ்வொரு நிமிடமும் ஏதோ ஒரு மொழியில் எம்மை பயங்கரவாதிகளாக இந்தியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிப்பவர்களாக சித்தரித்துக் கொண்டிருந்த நேரத்தில் சிறைக்காவலர்களுக்கும் ஏனைய கைதிகளுக்கும் நீ எமது போராட்டத்தின் நியாயத்தையும் - உண்மைகளையும் போதித்துக்கொண்டிருந்தாய். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல் அவர்களும் கேட்டுக் கொண்டிருந்தனர். நீ பட்டப் படிப்புப் படிக்கவில்லை. பெரிதாக மேடை போட்டுப் பேசவில்லை. ஆனால் எப்போதும் உனது கதையைக் கேட்கப் பலர் ஆவலாயிருந்தனர். உனது பேச்சுக்கும் செயலுக்கும் வித்தியாசமிருந்ததில்லை. அதனால் தான் மழையால் துயருறும் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிட வசதிக்காக வீடுகள் அமைக்கும் பணிக்காக கிடுகு வாங்கப் போகும் போது எமைப்பிரிந்திருக்கிறாய். 'நாளை பார்க்கலாம்'' என்று அந்த தொண்டர் நிறுவனத்தினர் கூறிய போதும் 'நாளை வரை என்ன செய்வது?'' என்று அவர்களைக் கூட்டிக் கொண்டு சென்றாய். உனது பலம் மக்கள் பணி என நீ நினைக்க எதிரியோ அதில்தான் உனது பலவீனத்தைக் கண்டுள்ளான். உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். இரவிரவாக அவர்கள் வந்து படுத்ததனால் மக்கள் அதைக் காணவில்லை. இல்லையேல் எத்தனை மைல் தூரமானாலும் ஓடியே வந்து செய்தி சொல்லியிருப்பார்கள்.

நீ எதிலும் கட்டுப்பாடானவன் நாங்கள் பயிற்சியை முடித்த காலம் அது. ஒருமுறை முகாமில் தவறுதலாக உனது துப்பாக்கி வெடித்தது. அச்சமயத்தில் முகாம் பொறுப்பாளர் அங்கு இல்லை. இச்செய்தியை அறிந்த அவர் அங்கு வந்து யார் அந்தத் தவறைச் செய்தது? என்று கேட்டார் எங்களில் ஒருவருக்கும் உன்னைக் காட்டிக் கொடுக்க விருப்பமில்லை. பேசாமல் இருந்துவிட்டோம். நீ வந்து 'நான்தான்'' என்று தவறைப் பொறுப்பேற்றாய். அன்று உன்னால் எங்கள் எல்லோருக்கும் தண்டனை. ஏன் கேட்டபோது சொல்லவில்லை என்று. எங்கள் எல்லோருக்கும் உன்னில் ஆத்திரம். உன்னால் தானே இந்த நிலையென்று உனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைப் பெற்றுக்கொண்ட நீ அதன் பின்னர் வந்து எமது முடிவு சரியானதல்ல என விளக்கினாய். அது எமக்குப் புரிந்தது. ஆனாலும் உன்னோடு கோபமாக இருந்தோம் எல்லோரும் ஒன்றாகத்தான் பயிற்சியெடுத்தோம் ஆனால் உன்னால் மட்டும் எப்படி வித்தியாசமாக சிந்திக்கவும் பேசவும் முடிந்தது?

1985 ஆம் ஆண்டில் இருந்து அம்பாறை மாவட்டத்தில் எதிரிகளோடு மோதிய ஒவ்வொரு போர்க்களத்தையும் நினைக்கிறேன். எதிரிக்கு மிகக்கிட்டத்தில் தான் நீ எப்போதும் நிற்பாய். விநாயகபுரத்தில் - முகத்துவாரத்தில் நிகழ்ந்த அந்த போதல்கள் எங்கள் முகாமில் பயிற்சியெடுத்தவர்களுள் தலைசிறந்தவர்கள் யார் என்பதை எடுத்துக் காட்டின. ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதலில் சாரதி நீ. போர்க்களத்தில் சாரதியின்பங்கு பெரிதல்லவா! அதனால் தானே பாரதப் போரில் கிருஷ்ணர் சாரதியாகச் சென்றதாகக் கூறுகின்றார்கள். அந்தத்தாக்குதல் முடிந்து குதூகலத்துடன் நாம் ஆடிப் பாடி வருகையில் நீ மட்டும் பாதையில் கவனமாக எமைக் கொண்டுவந்து சேர்த்தாய். அதன்பின்னே தான் பாடினாய் ஆடினாய். இந்த நினைவுகளையெல்லாம எந்தக் கால வெள்ளத்தாலும் அடித்துக் கொண்டு போக முடியாதடா.

உன்னை நினைத்து - உன் சமயோசிதபுத்தியைநினைத்து நாம் எப்போதும் சிரித்துக் கொள்ளுவது திருக்கோயிலில் நிகழ்ந்த சம்பவத்தைத் தான். அன்றொருநாள் இரவு சவக்காலையொன்றினுள் பழைய காலக்கல்லறையொன்



கப்டன்
சத்துருக்கன்

றுக்குக் கீழே தோண்டி சில ஆயுதங்களைப் புதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது நேரம் இரவு பன்னிரண்டு மணியிருக்கும். யாரோ இருவர் கதைத்துக் கொண்டபடியே வந்தனர். அவர்கள் எம்மைக் கண்டால் ஆபத்து' நாம் செய்யவந்த விஷயமும் வெளிவந்துவிடும். உடனடியாக உனது சாமர்த்தியம் கை கொடுத்தது. ஒரு கல்லறைக் குப்பின்னாலிருந்து துணியைப் போர்த்தியபடி கைகளை உயர்த்திக்கொண்டு நீ எழுந்தாய் பே பே.. பேய்' என்றபடி அவர்கள் ஓடியகாட்சி - அதைவிட அடுத்த நாள் அவர்கள் தாம் கண்டபேயைப்பற்றி கிராமத்தவர்களுக்கு விபரித்துக் கொண்டிருந்தபோது ஒன்றுமே தெரியாத அப்பாவி போல நீயும் சில சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டபோதும் .. அங்குநின்றால் சிரித்து விடுவேன் என்ற காரணத்தினால் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். ஆனால் உன்னால் அதையெல்லாம் சிரிக்காமல் இருந்து கேட்டுவிட்டு வரமுடிந்தது. எமது முகாமிற்கு வந்தும் நீ அதை எண்ணிச் சிரித்தாய். அந்தச்சிரிப்பு .. அதை இனிக் காணவே முடியாது என்ற உண்மை உறைக்கும் போது எமது விழிகளைக் கட்டுப் படுத்தமுடியவில்லை.

நீ சிறையிலிருந்து மீண்ட பின்னர் சிறிலங்காப் படைகளுடன் எங்கெங்கு மோதினாய். உனது தலைமைத்துவம் எப்படியிருந்தது என்றெல்லாம் அங்கிருந்து காயமடைந்து வரும் போராளிகள் கூறுவர்.

உன்னை நான் அறிவேன் தானே? சிறையில் இருந்த காலத்தில் இழந்த போராட்டக்களங்களை இதில் ஈடுகொடுத்ததை என்னால் உணரமுடிந்தது. அம்பாறையில் இத்தனை சதவீதம் தமது கட்டுப்பாட்டுக்குள் என்றுசிறிலங்கா அரசு அறிவித்துக் கொண்டிருந்தபோது நீ அம்பாறையென்ன அதற்கு அப்பால் வக்குமிட்டியா என்ற மொனறாகலை மாவட்டத்தை அண்டிய பகுதிகளில் கூட தாக்குதல் நடத்த முடியும் என நிரூபித்துக் கொண்டிருந்தாய். அடிக்கடி உன்னால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் பட்டியல் வெளிவரும். அப்போதெல்லாம் புது நம்பிக்கை பிறக்கும்.

கஸ்ரோ அண்ணரின் மறைவுக்குப் பின் நீ அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். தொடர்ந்து உன்னைப் பற்றி செய்திகள் கிடைத்துக்கொண்டிருக்கையில் 1991ஆம் ஆண்டு உன்னையும் எம்மிடமிருந்து பறித்துச் சென்றது என்ற செய்தி.

நீ எங்கு போய்விடமுடியும்? வயல் வாடிகளிலும், கிராமங்களிலும் உனது பெயரை யார் மறப்பார்? நீ பிறந்த பொத்துவிலிலிருந்து யாழ்ப்பாணம் வரை சத்துருக்கன் என்ற பெயரிலும் சந்துரு என்ற பெயரிலும் நீ வாழ்ந்து கொண்டு தானிருக்கிறாய். நாங்கள் பயிற்சியெடுத்த ஈரலிக்குளம் காடுகள் - நடந்து திரிந்த வயல்கள் எல்லாம் உன்பெயரைப்பாடுகின்றன. அதில் இந்த மண்ணின் விடுதலை நிச்சயம் என்ற வரிகளும் ஒலிக்கின்றன.

- மோகன்

## ஜி. பி. ஜீப் ஆகியது

இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் அமெரிக்கா ஒருவித மோட்டார் வாகனத்தை தயாரிக்க விரும்பியது. அந்த வாகனம் கால் தொன் எடையுள்ள பொதுப் பாவனை காராக (General Purpose Car)இருத்தல் வேண்டும். மிகவும் உறுதியானதாக எதிரியின் கவசவாகனமொன்றை கட்டியிழுத்து வரக்கூடியதாக இருக்க வேண்டும். இரண்டு போர் வீரர்கள் அவர்களின் ஆயுதங்கள், உணவுப் பொருட்கள் முதலியவற்றையும் சிறிதளவுயுத்த தளபாடங்களையும்சுமந்து வரக்கூடியதாக இருக்கவேண்டும் ஓரளவு கரடுமுரடான பாதையில் ஓடக்கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறான வாகனமொன்றை உருவாக்க முடியுமா? என அது விளம்பரப்படுத்தியது.

இதற்கிணங்க 'வில்லியஸ்' நிறுவனம் தயாரித்த புதியரக வாகனங்கள் ஜி.பி.(GP-General Purpose)என சுருக்கமாக அழைக்கப்பட்டன. பின்னர் அது 'ஜீப்' ஆக மாறியது.

## மக்கள் இயற்கையில் லயித்திருக்க விஞ்ஞானிகள் இரகசியத்தை அறியமுயற்சி

நாள் தோறும் எம் கண் முன்னே 'காணு' சூரியன் மனித ஆராய்ச்சிக்கு என்றும் மர்மமானதாகவே இருந்துவந்தது-இருந்து வருகிறது. சூரியனின் மர்மங்களில் மிகச்சிலவற்றையே மனிதனால் ஊகிக்க முடிந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது அதனை எமது கண்ணால் 'பார்க்க' முடியாதிருப்பதும் பூமியிலிருந்து மிகவும் அதிக தூரத்திலிருப்பதுமாகும்.

சூரியனின் இவ்வளவு பிரகாசத்திற்கும் சக்திக்கும்காரணம் என்ன? என்பதை வானிலை ஆராய்ச்சியாளர்கள் ஓரளவிற்கு கண்டு பிடித்துள்ளார்கள். சூரியன் ஒரு திரவக்குழம்பாலான கோளமா? அல்லது திண்மமா? வாயுவா? என்பது எவருக்கும் தெரியாது. அதன் ஒவ்வொருபகுதியும்வெவ்வேறு வேகத்தைக் கொண்ட சுழற்சி வேகத்தைக் கொண்டு இயங்குகிறது. இதனை மிகப்பெரிய ஐதரசன் அணு உலை எனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு செக்கனுக்கும்60 கோடி தொன் ஐதரசனை கீலியமாக மாற்றும்போது பெறப்படும் சக்தியும் கதிர் வீச்சும் அதன் வெப்பத்திற்கு காரணமாயுள்ளது. அதாவது பல கோடி ஐதரசன் குண்டுகளை வெடிக்கவைக்கும் போது பெறப்படும் சக்தி வெளிவிடப்படுகிறது.

அண்ட வெளியில் காணப்படும் பலகோடி நட்சத்திரங்களுடன் ஒப்பிடும்போது, அவற்றில் மிகவும் சாதாரணமான ஒன்றாகவே சூரிய நட்சத்திரத்தைக் கொள்ள முடியும். அதன் சுற்றளவு 13 இலட்சத்து 82 ஆயிரம் கி.மீ என மதிப்பிடப்பட்டுள்ளது.

சூரியகுடும்பத்தின் இயக்கம் சூரியனை மையமாகக் கொண்டது சூரியன் தவிர இக்குடும்பத்தின் உறுப்பினர்கள் எதற்கும் சுய ஒளி கிடையாது.

சூரியனின் மேற்பரப்பில், சூரியனின் உள்ளே என்ன உள்ளது எவ்வாறான இயக்கம் நடைபெறுகிறது என்பன பற்றிய ஆராய்ச்சிகள் பெருமளவு வெற்றி பெறவில்லை. விஞ்ஞானிகளின் கருத்துப்படி தற்பொழுது 72 சதவீத ஐதரசனும் 27 சதவீத கீலியமும் உள்ளன.

இவற்றின் அளவைக்கொண்டு சூரியனின் ஆயுளில் அரைவாசி முடிவடைந்துவிட்டது என கூறப்படுகிறது. சூரியன் தோன்றி500கோடி ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் 500கோடி ஆண்டுகளில் சூரியனின் சக்தி வெளிப்படுத்தும் திறன் இல்லாது போய்விடும் என கருதப்படுகிறது.

விஞ்ஞானிகளின் ஒரு மாநாட்டில் இவ்வாறு சூரியனின்

வேலவன்

ஆயுள் குறித்து கருத்துகள் முன் வைக்கப்பட்டபோது. ஒரு விஞ்ஞானி இவ்வாறுகூறினார் ''இன்னும் 500 கோடி ஆண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கலோர்- கலண்டேரியம் கலண்டர்

கலண்டர்கள் ஏற்பட முன்பு ரோம் நாட்டில் ஒவ்வொரு மாத முதல் நாளிலும் ஊர் பணியாள் ஒருவர் புதுமாதப பிறப்பை கூவிச்செல்வார். ரோமானிய மொழியில் 'கலோர்' என்றால் கூவுதல் என்று பொருள்

'கலோர்' என்பதிலிருந்து 'கலெண்ட்ஸ்' (முதல் திகதி)என்ற சொல் பிறந்தது. ரோம் வட்டிக்கடைக்காரர்கள் தங்கள் கணக்குகளில் ஒவ்வொரு மாத முதல் திகதியிலும் வட்டி கணித்து பதிந்து கொள்வர். அந்தக் கணக்குகளுக்குக் 'கலண்டேரியம்' என்று பெயர். அதிலிருந்து கலண்டர்என்றசொல் பிறந்தது.

சிறுகதை

# வேலி

தாமரைச்செல்வி

மத்தியானம் இரண்டு மணி.

சாப்பிட்டுவிட்டு வாசல் விறாந்தையில் ஈஸிசேரில் ஆறுதலாய் படுத்திருந்தேன்.

முற்றத்து தென்னை மரங்களின் அடர்ந்த ஓலைகளுக்கப்பால் வானத்தில் இரண்டு பொம்பர் சுற்றுவது தெரிந்தது தூரத்தில் ஹெலியின் இரைச்சலும் கேட்டது.

ஒரு மாசமாய் இந்த விமானங்களின் இரைச்சலும் குண்டுகளின் வெடிப்பு சத்தமுமாய் காதுகள் அதிர்ந்து போயிருந்தன இடை இடையே அவை தலைக்கு மேல் சுற்றும்போது அடிவயிற்றில் சில்லிடத்தான் செய்கிறது.

இரவு பகலாய் ஓய்வின்றி அலைந்து குண்டுகளைப் பொழிந்து தள்ளும் அவைகளின் இரைச்சல்களில் மனம் அதிரத்தான் செய்கிறது. ஆனையிறவிலிருந்து ஆறு மைலுக்கப்பால் இருக்கிற எங்களுக்கு இந்த அதிர்வென்றால் பக்கத்தில் நின்று போராடுகிற பெடியளுக்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைத்தபோது மனம் பாரமாய்க் கனத்தது.

மத்தியான நேரத்திலும் தெருவில் சனநடமாட்டம் இருந்தது. ஆனையிறவு சண்டை தொடங்கியதும் உமையாள்புரம் பரந்தன், குமரபுரம் பகுதிகளிலிருந்த சனம் எல்லாம் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்குப் போனதில் கொஞ்ச சனம் இந்த ஐந்தாம் வாய்க்கால் பகுதியிலும் வந்து குடியிருக்கிறார்கள். சொந்தக்காரர் வீட்டிலும் தெரிந்தவர் வீட்டிலுமாய் ஒரே சனங்கள்தான்.

விறாந்தைக்கு வந்த என் மனைவி தூர வானத்தைப் பார்த்துக் கொண்டே திண்ணையில் அமர்ந்தாள்.

"காலமையிலயிருந்து ஒரேயடியாய்ச் சுத்திறாங்கள். விட்டு விட்டு குண்டுச்சத்தமும் கேட்குது. நேற்றும் இப்பிடித்தான் இப்ப நாலு நாளாய் ஏதோ பெரிய சண்டைதான் நடக்குது போல கிடக்கு. என்ன ஆக்கினையோ தெரியது."

நானும் பெருமூச்சு விட்டபடியே வானத்தைப் பார்த்தேன்.

குண்டு விழுந்து வெடிக்கும் சத்தம் கொஞ்சம் சமீபத்தில் கேட்டது.

"உது கெமிக்கலுக்கு இட்டத்தால விழுந்திருக்கு."

அப்போது சண்முகம் அவசரம் அவசரமாக கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். அவனுடைய அவசரத்தைப் பார்த்துவிட்டு ஏதோ சிவபாலனுடைய பிரச்சினையாக்கும் என்று மனம் அலுத்துக் கொண்டது.

அடுத்த தெருவில் சண்முகமும் சிவபாலனும் பக்கத்து பக்கத்து வீட்டில இருப்பவர்கள். சிவபாலன் வெளிநாட்டில் இருந்து நன்கு உழைத்துவிட்டு வயல் செய்யும் எண்ணத்தில் வந்து இங்கே வயல் காணியில் குடும்பத்துடன் இருக்கிறான். சிவபாலன் ஒரு வகையில் எனக்குச் சொந்தக்காரப் பெடியன்தான். சண்முகம் எனக்கு எத்தனையோ காலப் பழக்கம்.

இவ்வளவு காலமும் சிவபாலன் வீட்டுக்கும் சண்முகம் வீட்டுக்கும் இடையே வேலி இருந்ததில்லை. சிவபாலன் வீட்டுக் கிணற்றில் தான் சண்முகம் வீட்டார் தண்ணீர் அள்ளி வந்தார்கள். ஆறு மாசத்துக்கு முதல் சிவபாலன் வெளிநாட்டிலிருந்து குடியிருக்க வந்ததும் இடையே வேலியை அடைத்து விட்டான்.

சண்முகம் நல்ல தண்ணீர் எடுக்க அரைமைல் தூரம் நடந்து போகவேண்டும். சண்முகம் வந்து என்னிடம் முறையிட்டதில் நான் சிவபாலனுடன் கதைத்து வேலிக்கு இடையே இரண்டு கதியாலைப் பிடுங்கி ஒரு சின்னப்பாதை வைப்பித்துக் கொடுத்தேன். இப்போது அந்த வேலியால் ஒரே பிரச்சினை. இருபக்கத்தாரின் முறைப்பாடும் என்னிடம் தான் வரும்.

சிவபாலனின் கீரைத்தோட்டத்தை சண்முகத்தின் ஆடு நாலு கடி கடித்தாலும் சிவபாலன் வந்து சத்தம் போடுவான் வேலியை வரிந்து கட்டி விடுவான். பிறகு நான் போய் சமாதானப்படுத்திப் பாதையை வைத்துக் கொடுப்பேன்.

இப்ப புதிதாய் என்ன பிரச்சினையோ என்று நினைத்தபடி சண்முகத்தைப் பார்த்தேன்.

"அண்ணை! இப்பவே வாங்கோ. சிவபாலன் வேலியை அடைச்சுப் போட்டான். இப்பிடி தண்ணி அள்ளிற சனத்தை மறிக்கிற ஆட்களை நான் காணேல்லை அண்ணை" அவனின் படபடப்பைப் பார்த்து —

"அவன் சும்மா அடைக்கிறானே. என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"காலமையிலயிருந்து சிவபாலனும் மனிசியும் எங்களைப் பேசினபடி இருக்குதுகள். வாளியையும் மண்வெட்டியையும் காணேல்லையாம். நாங்கள் தான் எடுக்கலாம். இவ்வளவு காலம் இருக்கிறம்- இப்ப இவை வந்து களவுப்பட்டம் கட்டுகினம். இப்பவே வந்து என்னெண்டு கேளுங்கோ அண்ணை. நாங்கள் ஏழையள் எண்டா என்ன வேணுமெண்டாலும் சொல்லலாம் எண்ட நினைவு."

"உங்களோடை பெரிய கரைச்சல். சரி நட வாறன்."

நான் எழுந்து உள்ளே வந்து ஷேர்ட் போட என் மனைவி வந்து முணுமுணுக்காள்.

"உங்களுக்கு வேற வேலையில்லை. உவையளின்ர சண்டையில தலையைப்போட்டுக் கொண்டிருக்கிறீங்கள்."

"என்ன செய்யிறது. இதுகளும் பாவம். ஒரு வாய் தண்ணிக்காகத் தானே அவனின்ர காணிக்குள்ள போக வேண்டிக் கிடக்கு."

"என்னவோ செய்யுங்கோ. சொன்னா கேட்கிற சாதியே நீங்கள். உந்த சமரசத்துக்குப் போய் ஒரு நாளைக்கு மூக்குடைபடுவீங்கள்"

அவளின் முணுமுணுப்பைக் கவனிக்காமல் நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு சண்முகத்துடன் அவன் வீட்டுக்குப் போனேன்-

சண்முகம் வீட்டு முற்றத்தில் சண்முகத்தின் மனைவி பாக்கியமும் பிள்ளைகளும் நின்றார்கள். பாக்கியத்தின் முகம் அழுததில் வீங்கிப் போயிருந்தது.

சிவபாலன் வீட்டு இடை வேலி அடைபட்டுக் கிடந்தது. வேலிக்கு அந்தப் பக்கம் நின்று சிவபாலனின் மனைவி சத்தமாய்ப் பேசுவது கேட்டது.

மண்ணால் மெழுகப்பட்டிருந்த சண்முகம் வீட்டு தலைவாசல் திண்ணையில் அமர்ந்தேன்.

"அண்ணை! இனிமேல் நாங்கள் அங்க தண்ணி அள்ளப் போகாமல் விடுறம். ஆனா தேவையில்லாமல் எங்களைக் கள்ளர் எண்டு பேச வேண்டாம் எண்டு சொல்லுங்கோ" என்றாள் பாக்கியம்.

"காலமையிலயிருந்து ஒரே பேச்சு. விடிய எழும்பினதிலிருந்து இவளுக்கும் மனம் சரியில்லை. ஆனையிறவிலே சண்டைச் சத்தம் கேட்கக் கேட்க இவள் ஒரே அழுகை. ஆனந்தனை நினைச்சு ஒரு மாசமாய் இவள் பாவி ஆன சாப்பாடு தண்ணி இல்லை. அவன் வெளிக்கிட்டபிறகு இது உள்ள கோயில் விரதமெல்லாம் பிடிச்சு ஒரு நேரச் சாப்பாட்டோட கிடந்து சாகுது. சொல்லும் போதே சண்முகத்தின் குரல் கரகரத்தது.

கண்களில் ஈரம் கசிய பாக்கியம் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இவர்களின் மகன் ஆனந்தன் ஆனையிறவில் ஏதோ ஒரு இடத்தில் நிற்கிறான். இவர்களது மனத்துயரம் எத்தகையது என்பது எனக்கு விளங்கியது;

இன்றைக்கு இவளை மாதிரி எத்தனை தாய்மாரின் வயிறு கொதித்துக் கொண்டிருக்கும். ....

"என்ர பிள்ளையின்ர பாடு என்னவெண்டு தெரியேலை. பேனகிழமை நடராசான்ர மகன் வந்து சொன்னவன்.... ஆனந்தன் கட்டுவங் கொட்டியில நிற்கிறான் எண்டு. கடவுளே என்னவோ ஏதோ எண்டு மனம் கலங்கிப் போயிருக்கிறம் அண்ணை. இந்தக் கலக்கத்துக்குள்ள நாங்கள் பதைச்சுக் கொண்டிருக்க இதுகள் ஒருபக்கம் வாயிலவந்தபடி பேசுதுகள். எதையெண்டு தாங்கிறது நாங்கள் தண்ணி அள்ளாமல் விடுறம். பேச வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டுப் போங்கோ அண்ணை."

பாக்கியம் திண்ணையில் அமர்ந்து அழத்தொடங்கினாள். நான் இரக்கத்துடன் அவளைப் பார்த்தேன்.

இவள் வயிறு கொதித்து அழுவது சிவபாலனின் பேச்சுக்காக மட்டும் அல்ல என்பது புரிந்தது.

நான் எழுந்து வேலியோரம் போய் சிவபாலனைக் கூப்பிட்டேன்.

சிவபாலனும் அவன் மனைவியும் வேலியருகில் வந்தார்கள். "என்னடாப்பா இது சண்டை...?"

"அண்ணை! உதுகளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நீங்கள் சொல்லிப்போட்டீங்கள் என்றதுக்காகத்தான் தண்ணி அள்ள விட்டனான். இனி நீங்கள் இதில தலையிட வேண்டாம். அவை ஆடு வளர்ப்பு மாடு வளர்ப்பு நாங்கள் பயிர்பச்சை செய்யிறேல்லையே மண்ணெண்ணெய் விக்கிற விலையில தோட்டம் செய்து அவையின்ர ஆடு மாடு தின்னவிட முடியுமே"

சிவபாலனை இடைமறித்து அவன் மனைவி சொன்னாள்.

'ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒண்டு காணாமல் போகுது. நல்ல அயல் அட்டை வாய்ச்சுது எங்களுக்கு.'

"அண்ணை! குறை நினைக்காதேங்கோ. இனி உவைக்காக நீங்கள் கதைக்க வரவேண்டாம். நான் வேலி அடைச்சுப் போட்டன்."

சிவபாலனின் பேச்சு என் மனதை வேகமாய்ச் சுட்டது. இப்படிப் பேசுபவனிடம் இனி என்ன கதைக்கிறது நெஞ்சில் பொங்கிய ஆத்திரத்துடன்-

"பக்கத்தில சண்டை நடக்குது. பொம்பர்காரங்கள் குண்டுகளைப் போட்டுத் தள்ளுறாங்கள். எவ்வளவு உயிர் பலியாகுது.

வாழ்வா சாவா எண்டு போராடிக் கொண்டிருக்கிற இந்த அளவு பிரச்சினைகளுக்குள்ளை இப்ப நீங்கள் வேலி அடைச்சுச் சண்டை பிடிச்சுக் கொண்டிருக்கிறீங்கள். வெட்கமாயில்லையேடாப்பா சரி என்னவோ செய்யுங்கோ. இவ்வளவு நீங்கள் சொன்ன பிறகு நான் கதைக்க வரேல்லை." நான் விடு விடுவென்று வந்து சண்முகத்திடம்—

"அரைக்கட்டை நடந்து போய் தண்ணி எடுத்தாலும் பரவாயில்லை அவன்ர காணிக்கை போகாதேங்கோ" என்று சொல்லிவிட்டு நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

"என்னவாம்?"

மனைவியின் கேள்விக்கு நடந்ததைச் சொன்னேன்.

"சிவபாலன் வெளிநாட்டில இருந்தவனல்லே அதுதான் இங்க உள்ள மனிசரின்ர கஷ்டம் விளங்குதில்லை. பிள்ளையின்ர கவலையில இதுகள் இருக்கேக்க அவன் சண்டை பிடிக்கிறது எவ்வளவு அற்பத்தனம். உறைக்க ரெண்டு பேச்சு பேசாதேங்கோவன்."

"பேசிற நிலைமை கடந்திட்டுது. மனிசத்தன்மை இல்லாதவனோட என்ன கதை. என்னவாவது செய்யட்டும்."

எரிச்சலுடன் சொல்லி விட்டு என் மாலைநேரவேலைகளைக் கவனித்தேன்.

வெய்யில் நன்றாக இறங்கி விட்டது. தலைக்கு மேலாக வவுனியாப் பக்கமாக இரண்டு பொம்பர்கள் மிகவும் உயரத்தில் பறந்து போனது.

"அறுபபாங்கள் கொண்டு வந்து கொட்டிப் போட்டுப் போறாங்கள்" என் மனைவியின் திட்டு காதில் விழ மாடு அவிழ்த்துக் கட்டி பால் எடுத்துக் கொடுத்து விட்டுக் குளித்தேன்.

குளித்து விட்டு திருநீறு பூசி தேநீர் குடித்து விட்டு கேற் வாசலுக்கு வந்தேன்.

தெருவில் ஒரு பரபரப்புத் தெரிந்தது. அப்போது சண்முகத்தின் பக்கத்து வீட்டு சின்னராசு ஓடி வந்தான்.

'அண்ணை! ஆனையிறவுச் சண்டையில ஆனந்தன் செத்துப் போனானம். 'பொடி' கொண்டு வருகினமாம். சண்முகண்ணை வீட்ட ஒரே குளறுகினம்."

எனக்கு 'பகீ'ரென்றது.

ஐயோ கடவுளே .....!

அடுத்த நிமிஷம் சைக்கிளில் அங்கே ஓடினேன் என்னைக் கண்டதும் சண்முகம் முகத்தைப் பொத்திக் கொண்டு குலுங்கி அழுதான்.

சிறு கூட்டமாய் ஊர் ஆட்கள் நின்றார்கள். தலைவாசல் திண்ணையில் நாலைந்து பெண்களுடன் பாக்கியம் பெருங்குரலில் அழுது கொண்டிருந்தாள்.

நெஞ்சை பிசைகிற அந்த ஓலத்தை தாங்க முடியாமல் நான் கண்கலங்க நின்றேன்.

ஆனந்தனைக் கொண்டு வந்த உடன தலைவாசலில கிடத்த ஒரு வாங்கு வேணும்'

எங்கட வீட்டில வாங்கு இருக்கு. நான் கொண்டு வாறன்' நான் அப்போதுதான் கவனித்தேன்.

சிவபாலன்.

நடு வேலியை பிய்த்துக் கொண்டு தன் வீட்டுக்கு ஓடினான். அவனும் இன்னொருவனுமாய் ஒரு வாங்கை தூக்கி கொண்டு வந்து தலை வாசலில் வைத்தார்கள்.

பின்னால் சிவபாலனின் மனைவி ஒரு குத்துவிளக்கைக் கொண்டு வந்து வாங்கின் ஓரத்தில் வைத்தாள்.

வாசலில் ஒரு வாகனம் வந்து நின்றது. அழுகுரல்களுக்கு நடுவில் பச்சை சீருடையில் ஆனந்தனைக் கிடத்திய பெட்டியை இறக்கினார்கள். நானும் சென்று ஒரு கை கொடுத்தேன் என்னுடன் சிவபாலனும் .....

தலைவாசலில் இருந்த வாங்கின் மீது பெட்டியைக் கொண்டு வந்து வைத்ததும் அழுகுரல் இன்னும் அதிகமானது.

தாங்க முடியாத துயரத்துடன் விலகி நின்று பார்த்தேன். தலைமாட்டில் குத்து விளக்கை கொளுத்திய சிவபாலனின் மனைவி சண்முகத்தின் பிள்ளைகளை சமாதானப்படுத்தி அந்தப் பக்கம் கூட்டிப் போனாள்.

என் பார்வையை திருப்பினேன். வாங்கு கொண்டு வருவதற்காக சிவபாலனால் பிய்க்கப்பட்ட நடு எல்லை வேலி நிலத்தில் விழுந்து கிடந்தது.

## தொலைந்து போன ஒருவன்

அந்தி சாயும் வேளை
இடியோசை போன்று
எழுந்த சத்தத்தில்
இந்த -
மண்ணின் துணிக்கைகள்
அதிர்ந்து போயின!
சில மணி நேரங்கள்
சின்ன சின்னதாய்
துப்பாக்கிச் சூடுகள்
இதயங்கள் எல்லாம்
ஏக்கத்தின் பிடிக்குள்
சிலிர்த்தன!
சில கணங்களில்
துயரக் கடலில்
மூழ்கிக் கிடந்த தெருவை
உசுப்பி மறைந்தது
அம்புலன்ஸ் வண்டி!
கண் சிமிட்டும் தாரகைகள்
கண்ணயர்ந்து கொள்ள
நிலவை இழந்து
நிர்மூலமாகிய வானமும்
நித்திரை செய்தது!
மரங்கள் விறைத்துப்போய்
காற்றும் காயப்பட்டு...
கனமாய் ..
இரவு கழிந்தது!
புலர்ந்த பொழுதில்
பறவைப் பாடகர்களின்
பூபாள இசையில்லை!
வீதி மருங்குகளில்
புதிதாய்
முளைத்திருந்த வாழையின்
இலைகள் சோகமாய்
அசைந்தன!
புரிந்தது!
சுதந்திரத்துக்காய் தேசம்
ஒருவனைத் தொலைத்து
விட்டது!

ஆதிலட்சுமி இராசையா

## சிதறிய நூல்கள்

சோவியத்தில் ஏற்பட்ட புரட்சியின் பின்னர் இந்தியாவிலுள்ள திருவனந்தபுரம் சோவியத் கலாசார நூல் நிலையம் மூடப்பட்டது. அங்கிருந்த அரிய பல புத்தகங்கள் சிவகாசி பட்டாசு தொழிற்சாலைக்கு நேராக அனுப்பப்பட்டன. இவற்றில் கம்யூனிசம் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல; விஞ்ஞானம் தொழில்நுட்பம் இலக்கியம் போன்றவையும் உண்டு

கடந்த தீபாவளியின்போது வெடித்துச் சிதறியவை சோவியத்தின் அரிய நூல்கள்தான்.

வெடித்துச் சிதறியது சோவியத் ஒன்றியம் மட்டுமல்ல. சோவியத்தின் அரிய புத்தகங்களும்.

தலைப்பு: **மணலாறு**
ஆசிரியர்: மணலாறு விஜயன்
வெளியீடு: தமிழ்த்தாய் பதிப்பகம்
பக்கம்: 75 (பின்னிணைப்பு உட்பட)
விலை: ரூபா 40 - 00

# மணலாறு நூல் ஒரு சமகால வரலாறு

ஒரு நூலின் சிறப்பும் அது பற்றிய கணிப்பீடும் அது யாருக்குச் சேவை செய்கின்றது? என்பதிலேயே பெரிதும் அடங்கியுள்ளது.

ஒடுக்குபவனுக்கா? ஒடுக்கப்படுபவனுக்கா? சேவை செய்கின்றது.

மணலாறு ஒடுக்கப்படுவோருக்குச் சேவை செய்கின்றது. அப்படியாயின் அது அடிப்படையிற் சிறந்த நூலே.

ஒரு நூலானது செம்மையானதாகவும் உண்மையானதாகவும், அழகானதாகவும் (சிவம், சத்தியம், சுந்தரம்) அமையவேண்டும்.

ஒடுக்குவோரைப் பற்றியும் அவர்களது ஒடுக்கு முறையைப் பற்றியும் ஒடுக்கப்படும் மக்களையும் அவர்கள் படும் துயரத்தையும் ஒடுக்கு முறைக்கு எதிரான அவர்களது போராட்டத்தையும் இந்நூல் சித்திரிப்பதனால் இந்நூல் உண்மையானதாக உள்ளது.

இந்நூல் செம்மையானதா? என்பதே அடுத்த கேள்வி இது மணலாறு மக்களின் சமகால வரலாற்றைக் கூறமுற்படுகின்றது வரலாறுஎன்பதுமக்களை, அந்த மக்கள்வாழும் மண்ணை அந்த மண்ணுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவை, அந்தமக்களின் உழைப்பை, அவர்களது வாழ்வை, அவர்கள் மீது நடத்தப்படும் ஒடுக்கு முறைகளை, அவர்களுக்கு ஏற்படும் பல்வேறு சவால்களை, இவை அனைத்திற்கும் அந்த மக்கள் முகம் கொடுக்கும் விதத்தை இவை அனைத்தின் அடியிலிருந்து பிறக்கும்பண்பாட்டு விழுமியத்தை விளக்குவது என்பதாகும் அவ்வாறு விளக்கும் வரலாறே செம்மையானதாகும்.

இந்நூல் மணலாற்றை தமிழ்மக்களின் மண்ணென்று கூறுகிறது. அந்த மண்ணைச் சிங்கள-பௌத்தபேரினவாதம் ஆக்கிரமிக்க எடுக்கும் நடவடிக்கைகளை விளக்குகின்றது. மணலாற்றுவாழ் தமிழ் மக்களின் வாழ்வையும் மணலாற்றின் வளத்தையும் மக்கள் அங்கு செய்யும் தொழில்களையும் மிருகங்களையும் பறவைகளையும் அதன் இயற்கைகளையும் விபரித்து இம்மக்களின் வாழ்வை ஒடுக்கி வளத்தைத் தனதாக்கிக் கொள்ள சிங்கள அரசு குடியேற்றத் திட்டம். பொலிஸ் இராணுவ ஒடுக்குமுறை போன்ற வழிவகைகள் மூலம் நிகழ்த்தும் ஆக்கிரமிப்பை வர்ணித்து ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தையும், அவர்களது பண்பாட்டினையும் சித்தரிக்கின்றது. ஆதலினால் அடிப்படையில் இது ஒரு செம்மையான நூலே. ஆயினும் இந்நூலில் இன்னும் சேர்க்கப்படவேண்டிய சில அம்சங்களும் விபரங்களும்உள.

அடுத்து இது அழகானதா? என்பது கேள்வி. சீரான வசன நடையில் செழிப்பான மொழி வளத்துடன் சரியானவகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நேர்த்தியாகக் கருத்துவெளிப்படுத்தப் பட்டிருப்பின் அடிப்படையில் அது அழகானதே. இவ்வியல்பு இந்நூலிற் கணிசமானளவு உண்டு.

வரலாறு பற்றியகோட்பாட்டுப் பிரசங்கத்தைச் செய்யாது ஆனால் இதுதான் வரலாறு என்ற உண்மையை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. சமகால வரலாற்றை எழுதியுள்ள ஒரு கணிப்பீடுள்ள நூலென இதனைக் கூறலாம்.

சிங்களப் பேரினவாதத்தின் தலையாய அம்சங்களுள்ஒன்று திட்டமிட்ட சிங்களக்குடியேற்றமாகும். இவ்வாறான சிங்களக் குடியேற்றத்திட்டப் பகுதிகளுள் ஒன்று மணலாறு குடியேற்றத்திற்கு எதிரான ஓர் அரசியற் கோரிக்கை தமிழ் மக்கள் மத்தியில் உண்டாயினும் அக்குடியேற்றத் திட்டங்களின் தாக்கத்தைப் பற்றியோ அதன் கொடூரங்களைப் பற்றியோ, அன்றேல் தமிழ்மக்கள் படும் இன்னல்களைப் பற்றியோ போதியளவு நூல்கள் வெளிவராமை துயரத்திற்கு உரியது.


மணலாறு பற்றி சிறிதளவு பிரசுரங்கள் வெளிவந்திருந்த போதிலும் இந்நூல்தான் பல் பரிமாணத்துடன் மணலாற்றின் துயரத்தை விளக்குகின்றது. குடியேற்றத் திட்டத்தின் நடைமுறையை அதனால் தமிழ்மக்கள் நாளாந்தம் படும் இன்னல்களை தெளிவாக இது கூறுகின்றது. இது பற்றி இந்நூலில் உள்ள ஒரு கட்டத்தை நோக்குவோம்:-

"1968 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இக்கிராமத்துக்கு அண்மைவரை வேகமான சிங்களக் குடியேற்றம் இடம் பெற்றது. இவ்வாண்டில் அமரிவயலின் கீழ்ப் பகுதியில் அமைந்த மாரியாமுனை சிறு கடற்பகுதியில் தொழில் ரீதியான மோதல் தொடர்ச்சியாக நடைபெற்றது. கொக்குளாய்ப் பகுதியில் இருந்த சிங்களக் குடும்பங்களில் சில மாரியாமுனைப் பகுதியில்வாடிகள் அமைத்து தொழில் செய்ய முற்பட்ட சமயத்திலேயே இம்மோதல் ஆரம்பமாகியது. கத்தி வாள் போன்ற ஆயுதங்களால் அமரிவயல் மக்கள் தாக்கப்பட்டனர். இப்பகையும் மோதலும் 1977 ஆம் ஆண்டு சிங்களவரின் பெரியளவிலான ஆக்கிரமிப்பு வரை நீடித்தது.

ஆனால் சிங்களக் காடையர்களின் கரங்கள் அனைத்திற்கும் துப்பாக்கி வாள் கத்தி என்பனவற்றை காட்டு விலங்குகளிடமிருந்து விவசாய உற்பத்திகளை பாதுகாத்தல் என்ற உத்தியோகபூர்வ காரணத்தின் கீழ்அரசு வழங்கியது இதனால் அமரிவயல்கிராம மக்கள் வெளியேசெல்ல முடியாத நிலை ஏற்பட்டது சிங்களக் காடையரால் தமிழர்கள் தாக்கப்படுதலும். அவர்களது உடைமைகள் கொள்ளையிடப்படுதலும்தொடர்ந்தது. அக்கிராம மக்களின் பெரும் செல்வமான பசு நிரைகள் கவர்ந்து செல்லப்பட்டன. விளைந்த நெல்வயல்களும், வெட்டிவைத்த சூடுகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. நெல்மூடைகள் பறிமுதல் செய்யப்பட்டன. நெல்வயல்களும் தோட்டக் காணிகளும் அடாத்தாகப் பிடிக்கப்பட்டன. வடிசாராயம் வடித்து சிங்களக் காடையர்களுக்கு பெருமளவு கொடுக்கப்பட்டதால் அவர்களது அட்டூழியங்கள் அதிகமாகத் தொடங்கின. இக்கால கட்டத்தில் தான் தமிழ் மக்களிடமிருந்த துப்பாக்கிகளை அரசு மீளப்பெற்றிருந்தது. இதனால் வெறுங்கையுடனிருந்த அமரிவயல் கிராம மக்களால் சிங்களக் காடையர்களை விரட்டியடிக்க முடியவில்லை. ஆனாலும் அனுமதிப் பத்திரமற்ற ஓரிரண்டு துப்பாக்கிகளுடன் காடையர்கள் கிராமத்துள் நுழைந்து தாக்கா வண்ணம் காவல் புரிந்தனர் அடாவடித்தனங்கள் எல்லைமீறும் போது ஆத்திரங்கொண்டு கைகலப்புக்களில் ஈடுபட்டனர். வெறுங்கைகளால் என்ன செய்யமுடியும். மண்பறிபோனதைத்தவிர வேறு திருப்பம் ஏற்படவில்லை" எனத் தொடர்கின்றது.

மொழிநடை, இலக்கணம், ஒழுங்கமைப்பு என்பன சம்பந்தமான சிறு குறைபாடுகள் இந்நூலில் உள்ளபோதிலும் இதனை ஒரு சிறந்த நூல் எனத் துணிந்து கூறலாம்.

**-சாரணன்**



# மலேரியா காய்ச்சல்

**மாறன்**

### மலேரியா என்றால் என்ன?

மலேரியாக் காய்ச்சல் என்பது பிளஸ்மோடியம் *PLASMODIUM* என்கிற குடும்பத்தைச் சேர்ந்த ஒருவகை ஒட்டுண்ணிக் கிருமிகளாலேயே *(PARASITES)* ஏற்படுகின்றது. இதில் நான்கு வகை உண்டு (1) பிளாஸ்மோடியம் - ஃபல்சிபாரம் *(P. FALCIPARUM)* பி.வைவக்ஸ் *(P.VIVAX)*. பி. ஓவாலே *(P OVALE)* பி. மலேரியே *(P.MALARIAE)* என்பன. ஆனாலும் இவற்றில் பிளாஸ்மோடியம் ஃபல்சிபாரம் என்கிற மலேரியாக் காய்ச்சலே மிகக்கடுமையானதும் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதானதுமாகும். மேற்கு ஆபிரிக்கா கண்டத்தில் பெருமளவில் காணப்பட்டாலும் இலங்கை, இந்தியா. பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் பெருமளவில் காணப்படுகிறது.

### மலேரியா எப்படி பரவுகிறது?

'அஃனோபிலின்' *(ANOPHILIN)* என்கிற நுளம்பே இம் மலேரியாக்காய்ச்சலைப்பரப்புகின்றது. அதாவது மலேரியா காய்ச்சல் உள்ள ஒருவரின் இரத்தத்தை உறிஞ்சும்போது நுளம்பின் வயிற்றுக்குள் மலேரியாக் கிருமிகள் செல்கின்றன. பின்பு அம்மலேரியாக் கிருமிகள் நுளம்பின் உடலில் விருத்தியடைந்து அதன் உமிழ் நீர்ப்பைக்குள் அடங்கியிருக்கும். இதே நுளம்பு இன்னொருவரைக் கடிக்கும்போது மலேரியா காய்ச்சல் அவருக்கு ஏற்படுகிறது. அதாவது நுளம்பு தன்னுடைய உயிர் வாழ்க்கைக்காக மனிதனுடைய இரத்தத்தை உறிஞ்சுகிறது மனிதனுடைய இரத்தம் அவனுடைய உடலை விட்டு வெளியே வந்ததும் உறையும் தன்மை கொண்டதால் நுளம்பு தான் கடிக்கும் போது இரத்தம் உறையாமலிருக்க கடித்ததும் உமிழ் நீரைச் சுரக்கின்றது. இந்த உமிழ் நீரில் *(SALIVA)* இரத்தத்தை உறையவிடாமல் வைத்திருக்கும் விசேட பதார்த்தம் இருக்கிறது. இதன் போது உமிழ்நீர்ச் சுரப்பியில் ஏற்கனவே குடிகொண்டிருக்கும் மலேரியாக்கிருமிகள் மனிதனுடைய உடலுக்குள் புகுந்து கொள்கின்றன. இவை இரத்தோட்டத்துடன் சென்று மனிதனுடைய ஈரலை *(LIVER)* அடைகின்றன இங்கு அவை மேலும் பெருகி மலேரியாக் காய்ச்சலைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு மலேரியா ஏற்பட்டவரை மீண்டும் இன்னோர் நுளம்பு கடிக்கும்போது இவருடைய இரத்தத்திலுள்ள மலேரியா கிருமிகள் மீண்டும் காவிச்செல்லப்படுகின்றன. இது இன்னொருவரைக் கடிக்கும்போது அவருக்கு மலேரியா ஏற்படுகிறது. இவ்வாறே ஒரு சங்கிலித் தொடராக மலேரியா பரவுகிறது.

### மலேரியாவிற்குரிய அறிகுறிகள் (CLINICAL PICTURE)

மலேரியா காய்ச்சலுடன் ஆரம்பிக்கும் இக்காய்ச்சலை அடையாளம் கண்டுபிடிக்க இதற்குரிய தனி அம்சம் இருக்கிறது. காய்ச்சல் ஏற்பட சற்று முன்னர் குளிர் ஏற்படும். அதனைத் தொடர்ந்து உடலில் கடுமையான நடுக்கம் ஏற்படும். அதனைத் தொடர்ந்து கடுமையாக வியர்க்கும் பின்பு காய்ச்சல் விட்டது போன்றிருக்கும். மீண்டும் மறுநாள் அல்லது அதற்கு மறுநாள் அதேபோன்று அனேகமாக அதேநேரத்தில் ஏற்படும். இது மலேரியாவுக்குரிய சிறப்பம்சமாகும்.

### மலேரியாவினால் ஏற்படும் பிரச்சினைகள்

**(1) மலேரியா மூளைக்காய்ச்சல் (CEREBRAL MALARIA)**

கடுமையான காய்ச்சலும், தடுமாற்றமும் வலிப்பும் ஏற்பட்டு பின்னர் அதனைத் தொடர்ந்து மயக்க நிலையிலேயே நீண்ட நேரம் இருப்பாரயின் மலேரியா மூளையைத் தாக்கி விட்டதென்பதை சந்தேகிக்கலாம். மலேரியாவினால் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டால் 20% தொடக்கம் 50% வரை உயிரிழப்பு ஏற்படும்

**(2) சிறுநீரகத்தைப் பாதிக்கும் (RENAL IMPAIREMENT)**

மலேரியா காய்ச்சல் ஏற்பட்டு கழிக்கின்ற சிறுநீரின் அளவு குறைந்தால் சிறுநீரகங்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன என்பதை உணரலாம். மேலும் உடனடி சிகிச்சை அளிக்காவிட்டால் சிறுநீரகத்தின் தொழிற்திறன் பாதிக்கப்பட்டு உயிராபத்தும் ஏற்படலாம்.

**(3) நுரையீரலைத் தாக்கும் (POLMONARY OEDEMA)**

இது அனேகமாக சிறுநீரகங்கள் பாதிக்கப்படுவதாலேயே ஏற்படுகின்றது. அல்லது மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு மயக்கத்தில் இருக்கும் போது வாந்தி எடுப்பதனாலும் ஏற்படலாம்.

**(4) படிப்படியான இரத்தப்பெருக்கும் (SPONTANEDUS BLEEDING)**

ஏற்படலாம். அனேகமாக முரசு தேலில் சிறுகாயங்கள் ஏற்படும்போது உணவுக்கால்வாய்த்தொகுதி *(GASTRO INTESTINAL)* என்பவற்றில் சிறியளவில் இரத்தக்கசிவு ஏற்படலாம்.

**(5) கடுமையான காமாலை (SEVERE ANAEMIA)**

ஏற்படலாம். அனேகமாக குழந்தைகளும். கர்ப்பிணித்தாய்மார்களுமே இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்களாவர். இதனாலும் உயிராபத்து ஏற்படலாம்.

**(6) சிறுநீருடன் இரத்தம் செல்லல் (HAEMOGLOBIUREA)**

மலேரியா கிருமிகளினால் இரத்தத்திலுள்ள செங்குருதிக் கலங்கள் (RC) உடைந்து அதன் நிறப்பொருள் சிறுநீருடன் கலப்பதால் சிறுநீர் கடும் சிவப்பாக இருக்கும். இதுவும் மிகவும் ஆபத்தான நிலையாகும்.

### மலேரியாவுக்குரிய சிகிச்சை முறை

மலேரியா காய்ச்சல் ஏற்படுகின்றவர்களுக்கு குளோரோகுயின்" *(CHLOROQUINE)* என்கிற மருந்து பெரும்பாலும் குணமடையச் செய்கிறது இதனை முதன் நாள் 600 மில்லிகிராமும் இரண்டாம் நாள் 600 மில்லிகிராமும் மூன்றாம் நாள் 300 மில்லிகிராமும் கொடுக்கப்படுகிறது. அதாவது 'குளோரோகுயின்' ஒரு குளிசை 150 மில்லிகிராமாகும். எனவே 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதன் நாள் 4 குளிசைகளும் இரண்டாம் நாள் 4 குளிசைகளும் மூன்றாம் நாள் 2 குளிசைகளும் கொடுக்கலாம். காய்ச்சல் தொடர்ந்தும் இருக்குமாயின் குளோரோகுயின் 2 குளிசை வீதம் தொடர்ந்து ஐந்து நாட்களுக்குக் கொடுக்கலாம். 5 தொடக்கம் 12 வயதுள்ளவர்களுக்கு முறையே 2 2 1குளிசைகளும் அல்லது 2 2 1 1 1 என ஐந்து நாட்களுக்குக் கொடுக்கலாம். இரண்டிற்கும் ஐந்திற்கும் இடைப்பட்ட வயதினருக்கு முறையே 1, 1 பாதி என கொடுக்கலாம் குளோரோகுயின் குளிசை குடிக்கும்போது ஏற்படும் முக்கிய பிரச்சினை என்னவெனில் வாந்தி ஆகும். சிலர் குடிக்கின்ற குளிசையையும் வாந்தி எடுப்பதால் மலேரியா மாறுவதற்கு பல நாட்கள் எடுக்கும் எனவே இவர்கள் வாந்தி எடுக்காமலிருப்பதற்கு 'ஃபெனாகன்' *(PHENAGAN -25mg)* என்கிற குளிசையும் எடுக்கலாம். அத்துடன் ஃபிரிமாகுயின் *(PRIMAQUIN)* என்கிற குளிசையும் சேர்த்து எடுக்கப்படல் வேண்டும் இது 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 15மில்லிகிராமும் அதாவது இரண்டு குளிசையும் 5-12 வயதினருக்கு ஒரு குளிசையும் 2-5 வயதினருக்கு பாதிக்குளிசையுமாக ஆகக்குறைந்தது ஐந்து நாட்களுக்கு எடுக்க வேண்டும். இதற்கும் வாந்தி எடுத்தல் ஒரு முக்கியபிரச்சினையாகும்.

### மலேரியா ஏற்படாமல் இருக்க சில தடுப்பு முறைகள்

மலேரியா 'அனோபிலின்' *(ANOPHELINE)* என்கின்ற நுளம்பினாலேயே பரவுகின்றது என்பதைக் குறிப்பிட்டிருந்தோம் இந் நுளம்பானது தேங்கி நிற்கும் நீர்க்குட்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் களுக்குள் புதிய சூரியன் ஒன் றைச் செய்து வான வெளியில் விட்டுவிடலாம் ''அ ரின் கரு த்து சாத்தியமானதா என் பதை பொறுத்திருந்துதான் ''பார்க்க'' வேண்டும்.

சூரியனின் சக்தி வெளிப் பாடு முடியும் காலத்தில் அதன் நடுப்பகுதியில் 10 சதவீத கீலி யம் அசைவற்று தங்கிவிடும்.

இறுதியாக கீலியமாக மாற் றப்படும் ஐதரசனின் சக்தி வெளிப்பாட்டால் சூரியன் பெரிதாக விரிவடைந்து மிகப் பிரகாசமான ஒளியை வெளி விடும். இதனால் வெடித்துச் சிதற வேண்டிய நிலை ஏற்பட லாம். பல பெரிய நட்சத்திரங் கள் இவ்வாறு வெடித்துச்சிதறி அழிந்து போயுள்ளன. ஆனால் சூரியன் நடுத்தர நட்சத்திர மாக இருப்பதனால் வெடித் துச் சிதறாது தவிர்க்கப்பட லாம்.

சூரியன் இறுதி நேரத்தில் வெளியிடும் வெப்பம் காரண மாக அதற்கு அண்மையிலுள்ள வீனசும், மேக்குரியும் எரிந்து சாம்பராகி விடும். பூமியில் உள்ள காற்று மண்டலம் இல் லாது வெளியேறி விடும். கடல் நீர் ஆவியாகி வெளியேறி விடும். பூமி சூரியனிலிருந்து தூரத்தில் இருப்பதால் எரி லாறு தப்பி விடலாம்.

இவ்வாறு சூரியனின் சக்தி வெளியிடும் காலம் முடி வடைந்ததும் வெடித்துச் சித றது விட்டால், பெரிதாக எரிந்து கொண்டிருந்த சூரியன் சிறிது சிறிதாக சுருங்கி பூமி யிலும் சிறிய கோளமாகி சிறி தளவு ஒளிர்வுடன் இயங்கிக் கொண்டிருக்கும். பின்னர் இந்தஒளிர்வும் குறைந்து சிறிய கோளாக அண்ட வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும்.

சூரியனைப்பற்றிய ஆராய்ச் சியில் மிகவும் முக்கிய கால மாக சூரிய கிரகணம் நடை பெறும் காலம் கொள்ளப் படுகிறது. அதிலும் பூரண சூரிய கிரகணம் நடைபெறும் காலத்தில் சூரியனின் பெரும் பகுதி மறைக்கப்படுவதால் அதுபற்றி ஆராய்வது சுலப மாக இருக்கும்.

பூரண சூரிய கிரகணம், பூமி யின் குறித்த ஒரு பகுதியில் 360 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நிகழும் அத்துடன் சில நிமிடங்களுக்கு மட்டுமே இதனை காணக்கூடியதாக இருக்கும். எனவே இந்த சில நிமிடங்கள் மிகவும் முக்கிய மானவை

இவ்வகையில் கடந்த வரு டம் ஹவாய் தீவுகளில் ஏற் பட்ட பூரண சூரிய கிரகணம் மிக அண்மைக்காலத்தில் ஏற் பட்ட ஒன்றாக காணப்படு கிறது. இது 4 நிமிடங்கள் 10 செக்கன்களுக்கு அவ தானிக்கக்கூடியதாக இருந் தது.

காலை சூரியன் உதித்து 30 நிமிடங்களின் பின் சூரிய கிர கணம் ஏற்படத் தொடங்கி யது சிறிது சிறிதாக சூரிய ஒளி மங்கி மாலை நேரததில் சூரியன் மறையும் போது ஏற் படும் மாற்றங்கள் போன்ற காட்சிகள் ஏற்பட்டன பூரண சூரிய கிரகணத்தின் ஆரம்பத் தில் பறவைகள் கூட்டுக் குச் சென்றன. காலையில் மலர்ந்தமலர்கள் வாடின. இயற்கை அனைத்தும் மாலை நேர கடமையை மேற்கொள் ளத்தொடங்கின. பல்லாயிரக் கணக்கான மக்கள் இதற்குச் சாட்சியாயிருந்தனர்.

முழுமதிநாளில் காணப் படும் ஒளி மட்டுமே காணப் பட்டது. சூரியன் சிறிய வெள் ளிக் கம்பி வளையம் போல காட்சியளித்தது. மக்கள் இயற் கையில் லயித்திருந்த வேளை யில் விஞ்ஞானிகள் சூரியனின் இரகசியத்தையறிய பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண் டிருந்தனர்.

இயற்கையின் பல்வேறு இர கசியங்களையும் அறிந்து கொள்ள முனையும் மனித னின் முயற்சியில் சூரியனைப் பற்றிய இரகசியங்கள் பல தொடர்ந்தும் மர்மமாகவே காணப்படுகிறது. ★

## மலேரியாக்காய்ச்சல்

கள் அதாவது வளவினுள் இருக்கும் பழைய சிரட்டை கள், ஒடு, பேணிகள், போத்தல் கள், சிறுகான்கள் என்பவற் றில் தேங்கி நிற்கும் மழை நீரில் முட்டையிட்டு இனப் பெருக்கமடைகிறது எனவே இத்தகைய பழைய பொருள் களை வீட்டு வளவினுள்ளும் வெற்றுக்காணிகளிலும், அயல் காணிகளிலும் இருக்கவிடாது சுத்தம் செய்தல் நல்லது. இப் படியான இடங்களுக்கு மலத் தியோன்' தெளிப்பதும் நல் லது. இரண்டாவதாக நுளம் புக்கடியிலிருந்து பாதுகாத் துக் கொள்வது இதற்கு நுளம்பு வலையைப் பயன் படுத்தலாம். இதில் கிழிஞ்சல் துவாரங்கள் இருக்காது பார்த் துக்கொள்ளவேண்டும். படுப் பதற்கு முன்னர், நுளம்பு ஏற் கனவே நுளம்பு வலையினுள் இருக்கின்றதா? என்பதைப் பார்க்கவேண்டும். ★


(ஆண்டு 11)

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்:

05-01-92

3-1-92 இற்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யவும்

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி 3722)



ஜெனரேற்றர் தேவை


வரணி வடிசாலைக்கு நல்ல நிலையில் உள்ள ஜெனரேற்றர் (5 K V.க்கு குறையாதது) ஒன்று தேவைப் படுகிறது. வழங்கக் கூடியவர்கள் விலை விபரத்துடன் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
வரணி வடிசாலை
கச்சாய் வீதி
கொடிகாமம்.

பொது முகாமையாளர்,
வரணி வடிசாலை.

(சி/3727)


# வீர அஞ்சலி



வடமராட்சித் தாக்குதல் படைப்பிரிவுத் தளபதியும், முன்னாள் வடமராட்சி விடுதலைப் புலிகள் பிரதிப் பொறுப்பாளருமான

## மேஜர் மேகன்

**(ஜெகநாதன் நிர்மலநாதன்)**


**வீரஜனனம்** 01.05.1972 **மணலாறு யுத்தத்தில் வீரச்சாவு** 10.09.1991

போர்களுக்கெல்லாம் தாய்ப்போர் என்று சிறிலங்காப்படைத் தள பதிகளினால் வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுப் போரிலும் இன்றுவரை இலங்கையின் வரலாற்றில் இடம்பெறாத பெரும் கானகப் போர் என்று கூறப்படுகின்ற மணலாற்றுப் போரிலும் எதிரியுடன் சமராடி வீர சுவர்க்கம் அடைந்து விட்டீர்கள்.

கங்கைக் கரையிலே குருஷேத்திரப் போர்க்களத்திலே சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டுவதற்காக அர்ச்சுனன் அன்று கையிலே காண்டீபத்தை ஏந்தினான். தமிழினத்தின் உரிமைகளுக்காகவும் தாய கத்தின் விடுதலைக்காகவும் வீரம் விளை நிலம் வடமராட்சி தொண்ட மானாறு தந்த வேங்கைகள் நீங்கள் இன்று உங்கள் கைகளிலே 'கலாஸ் னிக்கோவ்' துப்பாக்கிகளை ஏந்தினீர்கள். அன்று தொடக்கம் இன்று வரை தொடரும் யுக தர்மத்தின் புனிதக் காவலர்களாக நீங்கள் போர்க் களத்திலே வீரச்சாவைத் தழுவிக்கொண்டீர்கள்.

**ஆயுதங்களை ஏந்தியமையினால் நீங்கள் போராளி கள் என்ற பெருமை பெறவில்லை. நீங்கள் ஏந்திய மையினால் அவ்வாயுதங்கள் புனிதமானவை எனப் பெருமை பெற்றன.**

உடுப்பிட்டி றோட், தொண்டமானாறு.



வடமராட்சித் தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி

## மேஜர் கணேஸ்

(வைத்திலிங்கம் துரைவடிவேல்)

**வீரஜனனம்** 02-06-1970 **ஆனையிறவு யுத்தத்தில் வீரச்சாவு** 01-08-1991

வேங்கைகள் நீங்கள் வித்தியாசமானவர்கள்

மக்களை - மதிக்கும் மக்கள் மதிக்கும் மகத்தான மக்கள் போராளிக ளாகத் திகழ்ந்தீர்கள் அன்பு, அடக்கம் என்ற ஆயுதங்களால் மக்களை நீங்கள் அடிமை கொண்டீர்கள்.

**எங்கள் இதயத் தடாகங்களில் என்றும் மணம் கமழும் வாடா மலர்கள் நீங்கள். உங்கள் இருவரின் மகத்தான வீரத்தினால் மேலும் பெருமைகொள்ளும்**

**- தொண்டமானாறு மக்கள்**

உப்பு வல்லை றோட், தொண்டமனாறு

(2066)

# நலிந்து போன தொண்டாவின் தீர்வு திட்டத்தில் சிறிலங்கா ஜனாதிபதியின் பங்கு என்ன?

இனப் பிரச்சினைக்கான அமைச்சர் தொண்டமானின் சமரசத் திட்டம் கேள்விக்குரியதாக நலிவுற்று வருகின்றது. சமரசத்திட்டம் இவ்வாறு நலிவுறுவதற்கு தென்னிலங்கையில் பௌத்த பீடங்களிலும், ஏனைய பேரினவாத சக்திகளிடமும் இருந்து எழுந்த எதிர்ப்பின் எதிரொலியா அன்றி ஐக்கிய தேசியக்கட்சி, அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைப் புறக்கணித்ததனாலா? என்பதைத் தெளிவாகக் கூற முடியாவிட்டாலும், இத்தீர்வுத்திட்ட முயற்சி நலிவடைந்து செல்வதால் இலங்கை நீண்டகால உள்நாட்டுப் போர் ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று மட்டும் கூறலாம்.

அமைச்சர் தொண்டமான் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, இதில் அரசியல் கட்சிகள் பொதுவாக மௌனம் சாதித்தன என்றே கூறலாம். இதற்கு அமைச்சர் தொண்டமான், தனது தீர்வுத்திட்டம் பற்றி முன்னதாகவே அரசியல் கட்சித் தலைவர்களுடன் உரையாடியது காரணமாக இருக்கலாம். அல்லது இலங்கையின் இன்றைய ஜதார்த்த நிலையை உணர்ந்து, போரைத் தவிர்ப்பதைப் பற்றி சிந்தித்திருக்கலாம்.

## பலமான எதிர்ப்பு

ஆனால், பௌத்த பீடங்களில், ஏனைய பேரினவாத சக்திகளிடம் இருந்தும் பலமான எதிர்ப்புக்கள் கிளம்பின. பௌத்த பீடங்கள் எப்பொழுதுமே நிர்வாகமயப்படுத்தப்பட்டிருப்பதனால், அவற்றின் எதிர்ப்பு பலமானதாகும். இதேவேளை, சில பேரினவாத சக்திகளினால் புதிய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. மகாபோதி சங்கத் தலைவரான காமினி ஜெயசூரிய தலைமையில் 'சிங்களர் பாதுகாப்பு சங்கம்' ஒன்றும் உருவாக்கப்பட்டது.

திரு. தொண்டமான் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது, அல்லது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்ட போது அதற்கு பௌத்த சங்கங்களிடம் இருந்தும், பேரினவாத சக்திகளிடம் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பும் என அவர் எதிர்பார்க்காமல் இருந்திருக்க முடியாது. அவ்வாறு எதிர்பார்க்காமல் இருந்திருப்பாரானால் அவரது 'ஐம்பது வருட அரசியல் அனுபவம்' கேள்விக்குரிய தொன்றாகவே இருந்திருக்கும். ஆனால், திரு. தொண்டமான் இவ்வளவு பலமான எதிர்ப்புக் கிளம்பும் என எதிர்பார்க்காவிட்டாலும், எதிர்ப்புக் கிளம்பிய பின்னரும் அதைத் தாண்டி வரப்போவதாக அறிவித்தல் விடுத்திருந்தார்.

## ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு

ஆனால், திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டம் குறித்த ஐ. தே. கட்சியின் நிலைப்பாடுதான் தற்பொழுது அவரின் திட்டத்தை நலிவடையச் செய்துள்ளது போல் தெரிகின்றது. திரு. தொண்டமானுக்கும், ஐ.தே.கட்சிக்கும் இடையிலான உறவு சுமார் ஒன்றரை தசாப்தமாக நெருக்கமான உறவு இருந்து வருகின்றது.

1977ஆம் ஆண்டிலிருந்து ஐ. தே. கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக திரு. தொண்டமான் இருந்து வருகின்றார்.

அத்தோடு, ஐ. தே. கட்சியும், திரு. தொண்டமான் தலைமையிலான இ. தொ. காங்கிரசும் ஒரே சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் அளவில் அவர்களது உறவு பலமடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும், தற்போதைய ஜனாதிபதிக்கும் ஒரேயளவு விசுவாசமாகத் திரு. தொண்டமான் இருந்து வந்துள்ளார். அத்தோடு திரு. பிரேமதாசாவிற்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்ட போது சில அரசியல் அந்தரங்கக் காரியங்களுக்கு உதவியதாகவும் தெரியவருகிறது.

> தென்னிலங்கையில் அரசியல் எதிரிகள் பலமடைந்து வரும் நிலையில் திரு. தொண்டமானை சிறிலங்கா ஜனாதிபதி புறக்கணித்துவிடவோ அல்லது அவமானப்படுத்தவோ எண்ணியிருக்கமாட்டார். இந்நிலையில் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த தீர்வுத்திட்டம் பிரேமதாசா, தொண்டமான் ஆகியோரின் இணைந்த இராஜதந்திர நடவடிக்கை என்றே கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு இருக்க அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டத்தை அமைச்சரவை ஆராயவில்லை. அமைச்சர்கள் எவரும் அது குறித்துக் கருத்தேதும் வெளியிடவில்லை. அதே வேளை, மூன்று தினங்களுக்கு முன்னர் நடந்த ஐ. தே. கட்சியின் செயற் குழு கூட்டத்திலும் திரு. தொண்டாவின் திட்டத்தைப்பற்றி விவாதிக்கப்படவோ கருத்துக்கூறப்படவோ இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கமைய ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சகலரினதும் கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் பாராளுமன்றத் தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும்என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அறிக்கை தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்நிலைப்பாடு, திரு. தொண்டமானை பௌத்த சங்கங்களின் எதிர்ப்பைவிட பெரியளவில் பல வீனப் படுத்தியுள்ளது என்பது மட்டும் உண்மை. ஆனால், திரு. தொண்டமானின் தீர்வு குறித்து ஐ. தே. கட்சியின் இந்நிலைப்பாடு தற்பொழுது தென்னிலங்கையில் தீர்வுத்திட்டத்திற்கு எதிராக எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையால் உருவானதா? அல்லது தொண்டமானின் தீர்வுத் திட்டம் குறித்து ஆரம்பம் முதலே ஐ. தே. கட்சி இவ்வாறான நிலைப்பாட்டையே கொண்டுள்ளதா? என்பதும் இத் தீர்வுத் திட்டம் குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கும் திரு. தொண்டமானுக்கும் எந்தளவிற்கு புரிந்துணர்வு இருந்தது என்பதும் தற்பொழுது முக்கியமான விவகாரங்களாகும்.

## தனியாக தொண்டா உடையதல்ல

திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் இலங்கை தொழிலாளர் காங்கிரசினுடையது என்பது ஆரம்பம் முதலே வற்புறுத்தப்பட்டுவந்தது. ஆனால் இதனை எந்த அரசியல் விமர்சகர்களோ அன்றி அவதானிகளோ, செய்தியாளர்களோ ஏற்கவில்லை.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஓர் புத்திசாலித்தனமான ஆனால் அபாயகரமான ஆட்டம் ஒன்றை ஆடுகின்றார். ஒரு புறம் நிர்ப்பந்தத்தை அதிகரிக்குமாறு தன்னுடைய இராணுவத்தை சொல்கிறார் மறுபுறம்சமரசம் பேசுவோரை ஊக்கப்படுத்துகின்றார் என இந்தியா டுடே எழுதியது.

'தொண்டமானின்' தீர்வுத் திட்டம் உண்மையில் ஜனாதிபதிபிரேமதாசாவின்திட்டமே. நாம் அதனை அரசு - தொண்டமான் தீர்வுத்திட்டம் என்று கூறலாம். ஜனாதிபதி எம்மை இது தொண்டமானின் தீர்வுத் திட்டம் தான் என நம்ப வேண்டுமென நினைப்பாரேயானால் அது எமது மக்களின் மதிநுட்பத்திற்கு அவமானம். இதேவேளை ஜனாதிபதியின் உடன்பாடு இல்லாமல் எந்த ஒரு முட்டாளும் இப்படியான ஒரு தீர்வுத்திட்டத்தை புலிகளுடன்பேசப்போவதுமில்லை என லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

இதேவேளை, இத் தீர்வுத் திட்டம் குறித்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி குறிப்பிடுகையில், தொண்டமான் ஒரு அமைச்சரல்லவா? அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் அவர் எவ்வாறு பேசமுடியும்? எனக் கேள்வி எழுப்பினார்.

> இலங்கையின் சுதந்திரத்தின்போது பௌத்த பேரினவாதம் பௌத்த பீடங்களை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது. இன்று பலம் பொருந்திய இராணுவம் ஒன்றையும் துணையாகக் கொண்டுள்ளது.

## அரசாங்கம் பின் வாங்கியது

இந்நிலையில் கடந்த கால சிங்கள ஆட்சியாளர்களைப் போன்றே பிரேமதாசா அரசாங்கமும் பேரினவாத சக்திகளின் எதிர்ப்பைக் கண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இருந்துபின்வாங்கி விட்டது. 1956 இல் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தமும் கைச் சாத்தாகி அமுல் படுத்தப் படாமல் போயின. தொண்டமானின் திட்டமே விவாதிக்கப்பட முன்னரே தோற்றுப்போன திட்டமாய் மாறியுள்ளது. ஆனால், அன்று எதிர்ப்பாளர்கள் வீதியில் இறங்கிய பின்பே அரசாங்கம் பின்வாங்கியது. இன்று எதிர்ப்பாளர்கள் வீதியில் இறங்கு முன்பே அரசாங்கம் பின் வாங்கி விட்டது.

## தொண்டாவின் பங்கு என்ன?

இதே வேளை, இத்தீர்வுத் திட்டம் யாருடையதாகிலும் திரு. தொண்டமானின் பங்கு எத்தகையது என்பது தற்போது முக்கியமானதாகியுள்ளது. இத் தீர்வுத்திட்டத்தின் மூலம், திரு. தொண்டமான் பிரேமதாசாவினால் ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டாரா? அல்லது திரு. பிரேமதாஸாவும், திரு. தொண்டமானும் இணைந்து தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை மழுங்கடிப்பதற்காகவும் ஓர் அரசியல் சூழ்நிலை மகிப்பீட்டை செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நடவடிக்கையா? என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இன்று தென்னிலங்கையில் திரு. பிரேமதாஸாவிற்கு எதிராக பலமான அரசியல் சக்திகள் வளர்ந்து வருகின்றன. இந்நிலையில் தனது எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகள் குறித்து திரு. பிரேமதாஸா அக்கறை கொள்ளாமல் இருக்கமுடியாது. இதற்கான அக்கினிப் பரீட்சைகளையும் நடத்தாமல் இருக்க முடியாது. இந்நிலையில் பலம் பொருந்திய ஒரு சக்தியான திரு. தொண்டமானுக்கு அவமானம் ஏற்படக்கூடியதாகவோ அன்றி ஏமாற்றம் அளிக்க கூடியதாகவோ பிரேமதாஸா நடந்து கொள்வார் என எதிர்பார்க்க முடியாது அதுஅவருக்கு நட்டத்தையே விளைவிக்கும். ஆகையால் தொண்டமானின் தீர்வுத்திட்டம் இருவரும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நடவடிக்கையாகவே எண்ணவைக்கின்றது. அவ்வாறு இல்லாவிடில் தொண்டமான் ஆளுங்கட்சியின் நிலைதறித்து பெரும்விமர்சனங்களைஎழுப்பியிருக்கவேண்டும். இதுவே திரு. தொண்டமானின் வழக்கமும் கூட ஆனால்அவ்வாறுஇன்னும் இடம் பெறவில்லை. இதே வேளை அதற்கான காலம் இன்னும் போய்விடவில்லை.

## தமிழருக்குப் பலமான பாடம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவினதும்திரு. தொண்டமானினதும் பரீட்சார்த்த நடவடிக்கை அல்லது பரீட்சைகளும் தமிழரை இராஜதந்திரரீதியில் மடக்கடிக்கும் நோக்கில் செய்யப்பட்ட தாயினும் அதில் தமிழர்கள் சிக்கிக் கொள்ளவில்லை: வெற்றிகரமாக தப்பிக் கொண்டார்கள். ஆனால் அவர்களின் பரீட்சை முடிவுகள் தமிழருக்கும் பலமான ஒரு பாடத்தை போதித்துள்ளது.

அதாவது இலங்கை, சுதந்திரமடைந்த, காலத்தைவிட பௌத்த பேரினவாதம் இப்பொழுது மேலும் தீவிரம்பெற்றுள்ளது என்பதே அதுவாகும் முன்னர் பௌத்த பேரினவாதத்தின் மையமாக பௌத்த பீடங்களே இருந்தன துணையாக சிங்கள அரசாங்கமும் இருந்தது இன்று அவற்றிற்கு உறுதுணையாக பலம் பொருந்திய இனவாத சிந்தனையுடைய பெரும் இராணுவம் ஒன்றும் கட்டிவளர்க்கப்பட்டிருக்கின்றது. அன்று பௌத்த சங்கங்கள் வீதியில் இறங்கும் வரையும் அதிகாரத்தில் இருந்தோர் செயற்பட்டார்கள், ஆனால் இன்று பேரினவாதத்தின் குரலைக் கேட்டே அதிகாரத்தில் இருப்போர் பயப்படுகின்றார்கள்.

இந்நிலையில் எதிர்காலத்திலும் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு என்பது பகற்கனவாகவேஇருக்கும். இலங்கையில்எப்பொழுது இரு நாடுஉருவாகின்றதோ அப்பொழுது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

**--ஜெயராஜ்**

---

# 150 மலையக இளைஞர் புலிகளின் பயிற்சி முகாமில்?

(கொழும்பு)

மலையகத்திலுள்ள 17 தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 150 தமிழ் இளைஞர்கள் கடந்த மூன்று மாதங்களுக்குள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் மொனராகலையில் இயங்குவதாகக் கூறப்படும் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாமுக்கு சென்றிருக்கலாம் என்று மலையக பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

மலையகப்பகுதியில் கைது செய்யப்பட்ட சிலரின் வாக்கு மூலங்களில் இருந்து மொனராகலைக் காட்டில் விடுதலைப் புலிகள் பயிற்சி முகாம்ஒன்றை நடாத்தி வருவதாகவும் இதனால் கடந்த மூன்று மாதங்களில்இப்பகுதிகளில் காணாமல் போன சுமார் 150 இளைஞர்களும் மேற்படி புலிகளின் பயிற்சி முகாமுக்குச் சென்றிருக்கலாமா என்பதுபற்றி மலையக பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

---

# உரியவர்கள் பெறவும்

செல்லன் பூபாலசிங்கம் (583143203 V புத்தூர்) துரைராஜா. ராஜமனோகரன் (580333940 V அளவெட்டி) தம்பையா செல்வலிங்கம் (480600207 V அல்வாய்) நாகமுத்தன் அரியரத்தினம் (580853269 V சங்கானை)

ஆகியோரது அடையாள அட்டைகள் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

---

# அநாதரவாக நோயாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் ஆதரவற்ற இரு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களது சிகிச்சை தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் தொடர்பு கொள்வதற்கு யாரும் இல்லாத நிலையில் நோயாளர் நலன்புரிச் சங்கம் இவர்களை பராமரித்து வருகிறது. முத்து (வயது 65) கனகம்மா (வயது 45) ஆகிய இருவரதும் உறவினர்கள் யாராவது உடனடியாக நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

# அரசவங்கிகள் தனியார்மயம்; அரசாங்கம் தீவிர முயற்சி

(கொழும்பு)

அரச வங்கிகள் அனைத்தும் மிக விரைவில் தனியார் மயப் படுத்தப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை அரசு அந்தரங்கமாக மேற் கொண்டு வருகின்றது.

உலக வங்கியின் ஆலோசனைப்படி நாட்டிலுள்ள பல அரச நிறுவனங்களை அரசு தனியார் மயப்படுத்தி வருகின்றது. இந்த வரிசையில் அரச வங்கிகளையும் தனியார் மயப் படுத்துவதற்கு அரசு தீவிரமாக முயற்சி எடுத்து வருகின்றது.

இவ்வாறு வங்கிகளை தனியார்மயப்படுத்துவதற்குதென் பகுதித் தொழிற்சங்கங்கள்பல கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இந்த எதிர்ப்புக்களை முறியடிப்பதற்காகமேற்படி திட்டத்தை அரசு தற்காலிகமாக பிற்போட்டிருக்கின்றது. ஆனால் தனியார் மயப் படுத்தப்படுவதற்கான முடிவில் அரசு மாற்றம் எதையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

மேற்படி முடிவின்படி இத் திட்டத்தை மிக விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. (க)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் நீர் வளங்கள், சூழல் பேணுதல் தொடர்பாக இந்த மாதம் ஐந்தாம் திகதி பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறுவதாக இருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது. அடுத்த கலந்துரையாடல் நடைபெறும் திகதி பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கீர்த்தனையில் பங்கு கொள்க

அகில இலங்கை கம்பன் கழகத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12-01-92) தியாகராஜஸ்சுவாமிகள் இசை ஆராதனை விழாவில் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கம்பன் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

மக்கள் வங்கி

# பாதுகாப்பு உத்தியோகஸ்தர் சம். உயர்வில் புறக்கணிப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஆனால் மக்கள் வங்கி ஏனைய உத்தியோகத்தர்களுக்குப் புதிய சம்பளத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வு கோரித் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க இவர்களுக்கெனத் தொழிற்சங்கம் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு - யாழ்ப்பாணம்

# பணம் கொடுக்கல் வாங்கல் இலகுவாக்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் கணக்குவைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் பணக் கொடுக்கல்வாங்கல்களை டிராப்முறையில் இலகுவாக மேற்கொள்வதற்காக இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதென இலங்கை வங்கியின் வடமாகாணத்திற்கான உதவி முகாமையாளர் பி. ஜே. வின்சன் அறிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்தும், கொழும்பிலிருந்தும் வடபகுதிக்கு பணத்தை இலகுவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிவைப்பதற்கு கொழும்பு ஜோர்க் வீதியில் உள்ள இலங்கை வங்கியின் நாலாவது மாடியிலியங்கிவரும் வடமாகாணத்திற்கான கிளை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# மனநோய், மார்புநோய் கிளினிக்குகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மீண்டும் மனநோய் கிளினிக்கும் மார்பு நோய் கிளினிக்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

மார்பு நோய் கிளினிக்கை வைத்தியநிபுணர் எஸ். இந்திரராஜாவும், மனநோய் கிளினிக்கை வைத்திய நிபுணர் எஸ். செல்வரத்தினமும் மேற்கொண்டு வருகின்றனர். மனநோய் கிளினிக் ஒவ்வொரு மாதமும் 2ஆம், 4ஆம் வியாழக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றன. சில காலங்களாக இக்கிளினிக்குகள் இந்த வைத்திய சாலையில் நடைபெறாமல் இருந்தமையால் இந்நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் பலத்த இன்னல்களையனுபவித்து வந்தனர். (25)

# தொற்று நோயால் 20 பேர் மடுஅகதி முகாமில் மரணம்

மடு அகதிகள் முகாமில் இருபதிற்கும் மேற்பட்டோர் தொற்றுநோய்களால் மரணமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பருவமழை பெய்துவருவதாலும், தகுந்த மருத்துவ வசதிகள் இன்மையாலும், சுகாதாரச் சீர்கேடுகளாலும் வயிற்றோட்டம், வாந்திபேதி, மலேரியா போன்ற தொற்று நோய்கள் இங்கு பரவியுள்ளன.

இம்முகாமில் இருபத்தெட்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுயவிருப்பில் இளைப்பாறிய

# 425 ஊழியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பின் பேரில் யாழ். மாவட்டத்தில் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தற்போது யாழ்.செயலகத்தினால் வழங்கப்படுகிறது.

மேற்படி ஊழியர்கள் ஓய்வு பெற்று பன்னிரண்டு மாதங்களின் பின் தற்பொழுதே இவர்களுக்கான ஓய்வூதியம் முழுவதும் காசோலையாக வழங்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் அரசின் சுயவிருப்பின் பேரில் பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஓய்வு பெற்றபோதிலும் 425 பேருக்கு மட்டுமே தற்போது ஓய்வூதியம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து தொடர்ந்து பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த சில நாட்களில் ஏவப்பட்ட எறிகணைகள் குப்பிளான், ஏழாலை, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்துள்ளன. நேற்று மாலையும் பலாலியிலிருந்து எறிகணைகள் ஏவப்பட்டுள்ளன.

## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கின் இவ்வார அமர்வில் திரு. க, சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் ''எனது எழுத்துலக அனுபவங்கள்'' எனும் பொருளில் கருத்துரையாற்ற உள்ளார்.

பிரபாகரனுக்கு

டுக்கு வெளியில் எழும் தமிழர்களின் போராட்டத்தை இங்குள்ள தமிழர்கள் ஆதரிக்க முடியாதென்றால் தேசியம் என்ன பயனைத் தரப்போகிறது எனக் கேட்டார்.

தொடர்ந்து பேசுகையில் தமிழர்கள் பலமாகவும், தமது உரிமைகளை வற்புறுத்தும் தன்மையைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்தால் தான் மதிக்கப்படுவார்கள் என்றார். விடுதலைப் புலிகளைத் தீவிரவாதிகள் என்றோ பயங்கரவாதிகள் என்றோ நாம் கருதக் கூடாது. அவர்கள் தியாகிகள் என்றார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின்கொலையால் தமிழ் மக்களுக்கு இழப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை என்றும்-

இந்திரா காந்தியைப்போல் ராஜீவ் காந்தியும் இந்தியா-சிறிலங்கா உடன்பாட்டைத் தமிழர் தலைமேல் சுமத்தி தமிழர்களை ஏமாற்றியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபாகரனைத் 'தமிழர் தலைவன்' என்று போற்றும் கோஷங்களுடன் கூட்டம் கலைந்தது.

காலை உணவு

தற்போது பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு மட்டுமே காலை உணவு வழங்கப்படுகின்றது. இப் பாடசாலையில் தங்கியுள்ள மக்களின் உணவு வசதிகளை 'றெட் பானா'வே மேற் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (22)

இனப்பிரச்சினை

நாட்டின் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்புக்குள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணத் தான் முயற்சி எடுக்கப் போவதாக நேற்று ஜனாதிபதி ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட ஒரு தீர்வை அடைய அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைத்துச் செயற்பட்டால்தான் முடியும் என்பதையும் வற்புறுத்தினார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்று மூன்று ஆண்டுகள் நிறைவேறியது குறித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்

நாட்டில் உள்நாட்டுப்போருக்குத் தீர்வு ஏற்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படாவிட்டாலும், ஜனாதிபதி நேற்று மக்களுக்கு ஆற்றிய உரையில் மிகவும் நம்பிக்கை தரும்படி பேசியிருக்கிறார் என்று கொழும்பு பி.பி.ஸி. செய்தியாளர் கிறிஸ்தோபர் பொறிஸ் இலங்கைக் கண்ணோட்டத்தில்தெரிவித்தார்.

புலிகளை..

க்கை நிற்பாட்டப்பட மாட்டாது என்றும் அது ஓயமாட்டாது என்றும் தெரிவித்தார்.

பெலோசிப்

அதி உயர் பட்டமான ''பெலோசிப்'' என்ற பட்டத்தை இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்திக்கு வழங்கி கௌரவித்துள்ளது. (க

தீர்வு

படுகிறது.

அதிகாரப் பரவலாக்கல், அரசியல் அடிப்படை, காணி உட்பட வெவ்வேறு விவகாரங்களில் தனித்தனியாக இந்த உத்தேச உபகுழுக்கள் ஆராயும் என்றும்-

இந்த யோசனைக்கு பல அரசியல் கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி 10 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக் குழு கூடும் போது இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான

முன்னேற்ற கரமானது, ஆகையினால் அதன் அடிப்படையில் பேச்சுக்களை நடாத்தலாம் என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர். ஆனால் இனவாத சக்திகள் சமாதான தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை என்றார்.

சமாதான முயற்சி

தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தொண்டமானின் திட்டத்தை ஏற்பது நாட்டின் ஒற்றுமைக்கு கேடு விளைவிக்கும் என்றும் பௌத்தமத பீடங்களும் சில அரசியல் வாதிகளும் கருத்து வெளியிட்டிருப்பதையும் ஐலண்ட் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ். பல்கலைக்

இதற்கான தீர்வு யாழ். பல்கலைக்கழக உபவேந்தரின் தெளிவான முடிவில் தங்கியுள்ளதாகவும் பேராசிரியர் அலுவிகாரா. கூறுகிறார்

அவர் யாழ். பல்கலைக் கழக உபவேந்தருக்கு அண்மையில் எழுதிய கடிதமொன்றில் பல்கலைக்கழகங்கள்மானியங்கள் ஆணைக்குழு உபவேந்தர்கள் குழு மற்றும் பல்கலைக்கழக கல்லூரி பணிப்பாளர்கள் கூட்டங்களில் உபவேந்தர்களும், மருத்துவப் பிரிவுப் பீடாதிபதிகளும் கருத்து வெளியிடுகையில் யாழ். பல்கலைக் கழக மருத்துவத் துறை சார்ந்த மாணவர்களை ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு மாற்றும்முறை தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்றும் இதுவரை காலமும் இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவர்களுக்கு அனுமதி வழங்கி உதவிய ஏனைய பல்கலைக் கழக மருத்துவ பீடங்கள் இனிமேல் இவர்களுக்கான மாற்று ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்று முறையே அதன் தன் கருத்துக்களை தெரிவித்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார், யாழ். பல்கலைக்கழகத்தின் இன்றையநிலைமாணவர்அதிகரிப்பு மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் ஆகியவற்றை கருத்தில்கொண்டே இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் அந்தக் கடிதம் கூறுகிறது.

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடு தலா ஒரு மாணவனுக்கு என்ற அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடம்பெயர விண்ணப்பிக்கும் போது நிதி ஒதுக்கீட்டை ஏன் குறைக்கக் கூடாது என்ற கேள்வியும் எழுகிறது. அத்துடன் பல்கலைக்கழக ஆசிரியர்களின் வகை தொகையும் குறைகிறது. இவைகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் நிறுவப் படலாம் என்ற நிலைப்பாட்டை வலுவாக்கிறது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்படுகிறது,

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து இடம் பெயர்ந்து குடும்பங்களுடன் கொழும்பில் தங்கியிருக்கும் பேராசிரியர்கள் சிலரும் இத் திட்டத்தின் பின்னணியில் செயற்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1992 ஆம் ஆண்டிற்கான
புதிய வகுப்புக்கள் யாவும்
தை 5 முதல்
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
(சி/3723)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.